சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு ஆனி மாதம் 6-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 20-ம் இலக்கம்

## அங்கும் இங்கும்

"மாகாணப்பொலிஸ்ஸ்ரேஷன்களி லுள்ள பொலிஸ் அதிகாரிகள் இப்போது நடந்துகொள்ளும் முறை சரியில்லை. இந்தமா[illegible]ிரி இனிமேலும் அவர்களை அனுமதித்தால் அடுத்த பொதுத்தேர்தலில் எம். ஈ. பி. வீழ்ச்சியடைவது நிச்சயமென்று நான் பிரதமரை எச்சரிக்கின்றேன்."

திரு. டபிள்யு. தஹநாயகா,
கல்விமந்திரி.

"ஜனநாயகம் என்றபோர்வையிலே கம்யூனிஸ்தர்களின் பிடியில் பிரதமர் பண்டாரநாயகா சிக்கியிருக்கிறார். கம்யூனிஸ்தர்கள் இங்கு சரியாகக் கால் வைத்ததும் இந்தநாட்டினை ஏதேச்சாதிகார நாடாக்கிவிடுவார்கள். இந்த நாட்டை ஜனநாயகமுறையில் சரிவர ஆட்சிசெய்வாரென்ற நம்பிக்கையோடு தான் திரு. பண்டாரநாயகாவிடம் ஆட்சிப்பொறுப்பை மக்கள்ஒப்படைத்தார்கள். ஆனால், அவர் அதைமீறிக் கம்யூனிஸ்தர்கள் இந்தநாட்டில் ஸ்திரமடைய அவர்களுக்கு உதவிபுரிகிறார்."

திரு. டட்லி சேனநாயகா

"புத்தமதத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் கம்யூனிஸத்துக்குத் தடையுத்தரவு போடவேண்டும். இங்குள்ளகம்யூனிஸ்தகட்சியானது ருஷிய கம்யூனிஸ்தகட்சியின் கொள்கைகளையும், போதனைகளையும் இந்நாட்டில் பரப்ப முயற்சிசெய்து வருகின்றது. தற்போதுஆட்சியிலுள்ள அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டுக் கம்யூனிஸ்தர்கள் அதிகாரபதவிக்குவர முயற்சிசெய்கிறார்கள். இந்நாட்[illegible]ல் புத்தமதம் உள்ளவரை அவர்களி[illegible] விருப்பம் ஈடேறமாட்டாது."

திரு. ஆர். ஜி. சேனநாயகா,
வர்த்தகமந்திரி.

### நன்மைக்குப்பதில் நாசம்

"சமஷ்டிக்கட்சியின் சத்தியாக்கிரகத்தை உத்தேசித்துப் பிரதமர் திரட்டப்போகும் ஒருலட்சம் பேர்கொண்ட தொண்டர்படை நன்மைசெய்வதற்குப் பதிலாக நாசத்தையே உண்டுபண்ணும். பல நூறு வருடங்களாசச் சகோதரங்கள்போல் வாழ்ந்துவந்த இந்நாட்டின் இருபெரும் சமூகங்களையும் இந்தநடவடிக்கை சத்துருக்களாக்கிவிடும். மொழிப்பிரச்சினையால் இலங்கையில் ஓர் உள்நாட்டுக்கலகமே ஏற்படலாமெனத் தோன்றுகிறது."

புத்தகுரு பஞ்சதாச தேரோ,
வெல்லத்தோட்டை.

### ஜனநாயகத்துக்கே உலைவைக்கும்

"எம். ஈ. பி. இன் ஆதரவில் சேர்க்கப்படும் ஒருலட்சம் தொண்டர்களைக் கொண்ட அரசியல்இராணுவம் ஜனநாயகத்துக்கே உலைவைப்பதாகும். நாட்டில் அமைதியையும், சட்டத்தையும் நிலைநாட்டுவதற்கென அமைக்கப்படுவதாகக் கூறிக்கொண்டு எம். ஈ. பி. அமைக்கும் இந்தத் தொண்டர்படை உண்மையிலேயே ஓர் அரசியல் இராணுவமே. இந்த நடவடிக்கையால் இந்நாட்டில் ஜனநாயகஆட்சி குழி தோண்டிப் புதைக்கப்படுகிறதென்பதைத் திரு. பண்டாரநாயகா போன்ற மேதாவிகளுக்கு நான் ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமில்லை."

திரு. ட[illegible]லி சேனநாயகா,

"மொழிப்பிரச்சினை கட்சிவேறுபாடின்றித் தீர்க்கப்படவேண்டிய ஓர் கருமம். சிறுபான்மையினருக்கு அநீதி இழைக்காதவகையில் சிங்களத்திற்கு உத்தியோகமொழி அந்தஸ்து அளிக்கப்படவேண்டும். இன்றைய அரசாங்கத்தின்கீழ் நாட்டை எதிர்நோக்கியுள்ள நிலைமைகாரணமாக நான் மீண்டும் அரசியலில் தீவிரபங்கு எடுத்துக்கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளது. இன்றுள்ள நாட்டின் நெருக்கடியை உத்தேசித்து நாட்டைக் காப்பாற்றி வைக்க எனதுசேவை மிக அவசியமென்று நான் கருதுகிறேன். அரசியல்அரங்கிற்கு நான்மீண்டும் வந்திருக்கிறேன். ஏனெனில், இங்கு நடைபெறுவதைப் பார்த்துக்கொண்டு இந்த மண்ணில் பிறந்தஎவனும் கைகட்டிக் கொண்டு சும்மாவிருக்கமாட்டான."

திரு. டட்லி சேனநாயகா

### பிரதமரின் கடமை

"நாட்டில்ஏற்படக்கூடிய ஓர்நெருக்கடியானநிலைமையைத் தனது அதிகாரத்தின் கீழுள்ள இராணுவத்தினாலும் பொலிஸ்ப[illegible]ாளத்தினாலும் சமாளிக்க முடியா[illegible]தன்று பிரதமர் உணருகிறாராயின் உடனேபதவியை இராஜிநாமாச்செய்துவிடவேண்டியது அவரின் கடமையாகும். தனதுகட்சி ஆதரவாளர்களைக்கொண்ட தொண்டர்படை ஒன்றை அவர் ஆதரிப்பதானது அவருக்கு இராணுவத்தின்மீதும், பொலிஸ்பட்டாளத்தின்மீதும் நம்பிக்கை இல்லைஎன்பதைக் காட்டுகின்றது. மக்களின் ஐக்கியத்தில்தான் சமாதானம் தங்கியிருக்கின்றது. அதிகாரத்திலிருக்கும்கட்சி [illegible]னது சொந்தஇராணுவம் ஒன்றை அ[illegible]ப்பதினால் சமாதானத்தை நிலைந[illegible]ட முடியாது."

திரு. ஈ. எல். பி. ஹூருல்லை,
ஹொரவப்பொத்தானை, எம். பி.

### கம்யூனிஸ்தகட்சியின் போக்கு

"மொழிப்பிரச்சினையைவிடப் பொருளாதாரப் பிரச்சினைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கம்யூனிஸ்தகட்சி கூக்குரலிடுகின்றது. தமிழ்ப்பேசும்மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளையிட்டாவது கம்யூனிஸ்தகட்சி அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. வடபாகத்தில் வசிக்கும் பல்லாயிரக்கணக்கானோரின் பொருளாதாரவளத்தைப் பெருக்கக்கூடியதாக மகாவலிகங்கையை வடமாகாணத்துக்கூடாகப் பாய்ந்தோடச்செய்ய வேண்டுமென்றயோசனை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது, கம்யூனிஸ்தகட்சி மவுனம்சாதித்தது. திரு. பீற்றர் கெனமன் விவாதத்தின்போது சபையிலிருந்து வெளியேசென்றுவிட்டார். டக்றர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா வாய் திறக்கவேயில்லை. தமிழ்ப்பகுதிகளின் பொருளாதாரத்தை முடமாக்கக்கூடியனவாய் எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் கம்யூனிஸ்தகட்சி எப்போதாவது எதிர்த்ததுண்டா?"

திரு. எஸ். இராசதுரை,
மட்டக்களப்பு, எம். பி.

### ஜயந்திவருடம் இருண்டவருடம்

"சந்தோஷமும், சுபீட்சமுங்கொண்ட ஓர்ஜயந்திவருடத்தைக்காண ஆவலோடிருந்த இலங்கைமக்கள் ஏமாந்துவிட்டார்கள். சிங்கள சரித்திரத்தில் ஜயந்திவருடம் ஓர்இருண்ட வருடமாக எழுதப்படும். பிக்குகள் பிளவுபட்டிருக்கிறார்கள். சமூகங்கள் பிளவுபட்டிருக்கின்றன. மக்கள் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். அரசியல்மேடைகளிலேறி ஏனையமதங்களை நிந்திப்பதன்மூலம் இன்று சிலர் புத்தமதத்திற்குப் புத்துயிரளிக்க விரும்புகிறார்கள். இதன்விளைவாகப் பல்வேறு சமூகங்களுக்குமிடையில் இருந்தஐக்கியம் சிதைந்திருக்கிறது."

திரு. டட்லி சேனநாயகா.

### மொழிச்சட்ட விஷக்கனிகள்

"தமிழரசுக்கட்சி பத்திரிகைகள் வாயிலாக இந்நாட்டில் பரபரப்பை உருவாக்கிவருகின்றது. இதேசமயத்தில் அரசாங்கமும் பரபரப்பைச் சிருட்டித்துவருகிறது. இவைகள் நீங்கலாக மற்றுஞ்சிலர் பரபரப்பைஉண்டுபண்ணி வருகின்றார்கள். ஆரம்பத்திலிருந்து வேண்டுமென்றே அரசாங்கம் மொழிச்சட்டத்தின்மூலம் அநீதியை உருவாக்கியது. மொழிச்சட்டம் இந்தவிஷக்கனிகளை அளித்துள்ளது. திரு. பண்டாரநாயகா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஒருலட்சம் தொண்டர்களைத் திரட்டும்யோசனையும், பாஸ்போட்டுகள் வழங்குவதை நிறுத்தியதும் மேலும் மிகநெருக்கடியான நிலைமையை உருவாக்கியுள்ளது."

டக்றர் கொல்வின் ஆர். டி சில்வா
லங்கா சமசமாஜகட்சிப் பிரமுகர்

சதாசகாயமாதா கோணம்

## மாயமாய் மறைந்த வலி

சதாசகாயமாதாவே! என் அன்பான தாயே! உமக்கு என் அன்பின் வணக்கம். கொழும்பு, கொட்டாஞ்சேனையிலுள்ள நல்லாயன்மடத்தில் படிக்கும் ஓர்ஏழைச்சிறுமி நான். எனக்கு 9 வயதாயிருக்கும்போது வகுப்புநேரத்தில் திடீரென்று ஒருபயங்கரமானவலி ஏற்பட்டது. ஏதோ ஒரு நெருப்பு உருண்டையைக் காண்பதுபோலஇருந்தது. பின்பு மயக்கம்அடைந்து அறிவு நினைவிழந்தேன். அன்றுதொட்டு ஒவ்வொருமாதமும் தப்பாது அந்தவலி வந்துகொண்டேயிருந்தது. எனது பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் இந்த வலிவரும்நேரம் பெருங்கண்ணறுவியான காட்சியாக இருந்தது. எனது பெற்றோர் எனக்குச்செய்யாத வைத்தியம்இல்லை. நேராத நேர்த்தியில்லை. கையெடாத தெய்வம்இல்லை. நான் படும் அவதியைச் சகிக்காது பேய்க்குப்பார்க்கக்கூட அவர்கள் தயங்கவில்லை. என்னத்தைச்செய்தும் சுகம்மாத்திரங் கிடைக்கவில்லை.

சிலகாட்களின்முன் பொறளை, சகல அர்ச்சியசிட்டர்கள் ஆலயத்தில்நடைபெறும் சதாசகாயமாதா நோவனையைப்பற்றியும், அந்தப்பத்திமுயற்சியின் பயனாகநடைபெறும் சதாசகாயமாதா நோவனையைப்பற்றியும், பெரிய புதுமைகளைப்பற்றியும் என் இளைய சகோதரிமூலம் அறியவந்தேன். இதைக்கேள்விப்பட்டதும் எனது தாயார் என்நோயைத் தீர்க்கும்படியாகச் சதாசகாயமாதாவுக்கு ஒருவிண்ணப்பம்எழுதி அவவின் பாதாரவிந்தங்களிற் சமர்ப்பிக்கும்படியும், நோவனைப்பத்தி முயற்சியில் பங்குபற்றும்படியும் எனக்குப் புத்திமதி கூறினா.

நான் 1955-ம் ஆண்டு தைமாதம் முதற்புதன்கிழமை தொடக்கமாக அந்தத் திருசேத்திரத்தைச் சந்தித்து மன்றாடிவருகிறேன். மூன்றுமுறைமாத்திரம்தாயே! நான்உம்மைச் சந்தியாதுவிட்டேன். எப்படி ஒழுங்காக நான் நோவனையிற் பங்குபற்றி மன்றாடியும் எனக்கு ஒருவிதசுகமும் ஏற்படவில்லை. வலியின்அகோரம் கூடிக்கொண்டு வந்ததேயொழியக் குறைந்தபாடில்லை.

என் பெற்றாரின் துக்கமும், அங்கலாய்ப்பும்கூடவே, உற்றார்உறவினரும், சிநேகிதரும் திரும்பவும் பேய்க்காரியம் பார்க்கும்படி புத்திபுகட்டினர். எனது தாயார் ஒரேபிடியாகத் தான் அதற்குச் சம்மதிக்கமுடியாதென்றும், சதாசகாயமாதா நிச்சயமாக எனக்குச் சுகங் கொடுப்பாவென்றும் கூறிவிட்டார்.


நான் தெருவால் நடக்கும்போது இந்தவலி வந்ததாகவும், மூன்றுகன்னியாஸ்திரிமார் என்னை வீட்டுக்குக் கொண்டுவர உதவிசெய்ததாகவும், என்னை என் தாயாரிடம் ஒப்படைத்ததாகவும் இந்தவருடம் தைமாதம் எனது தாயார் ஒருதரிசனங்கண்டார். கனவுகண்ட அன்றுதொடக்கம் எனக்கு மாதாந்தம் வந்துகொண்டிருந்த வலி மாயமாய் மறைந்துவிட்டது. என்பெற்றோரின் சந்தோஷத்துக்கு அளவேயில்லை. மனச்சாந்தியும், சமாதானமும்உள்ளவர்களாயிருக்கிறார்கள். சதாசகாயமாதாசெய்த இந்தப்பெரிய புதுமையை நானோ, அல்லது என்பெற்றோரோ ஒருபோதும் மறக்கமுடியாது.

சதாசகாயமாதாவே! உமது திருப்பாதத்தண்டை விழுந்து உம்மைநமஸ்கரிக்கிறோம். எங்களை அதிகமதிகமாக ஆசீர்வதித்தருளும். எங்களுக்கு ஆத்துமசரீரநலன்களைத் தந்தருளும். எனக்கு நீர் அடைந்துதந்த சகாயத்துக்காக எங்கள்சீவபரியந்தம் உமக்கு நன்றித்துதி கூறுவோம்.

(செல்வி கத்தறின் சவுசா "நோவனைப் புதினம்" என்னும் ஆங்கில பத்திரிகைக் கெழுதியனுப்பிய கடிதத்தின். தமிழ்ச் சாரம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதபோதகநாடுகளின் குரலொலி



## வேதப்பரப்புதல்சபைத் தேசியதலைவரின் திருமுகம்

### வியாதிஸ்தரின் ஞாயிறு

#### இன்னேர்விதமான வேதப்பரப்புதல் வழி

மாதாவின்மாதம் முடிவாயிற்று. தமதுமக்களை யேசுவிடம் சேர்ப்பதே அவவின் ஒரேநோக்கம். பாலப்பருவத்திலிருந்த திருச்சபையைத் தூய ஆவியானவரின் வருகைக்கு நடத்திக் கொண்டுபோனதுபோல அவ இந்நாட்களிலும் தமதுமக்களைத் தூயஆவியானவரின் திருநாளுக்கு ஆயத்தப்படுத்தத் தூண்டிவருவா. இப்பெரியதிருநாளுக்கு ஆயத்தஞ்செய்ய நியமிக்கப்பட்ட இந்நாட்களிலே மற்ருேர்விஷயத்தை உங்களுக்கு நினைப்பூட்டக்கருதுகிரேும்.

ஐப்பசிமாதம் கிறீஸ்துஇராசா திருநாளுக்கு முன்வரும் ஞாயிற்றுக்கிழமை வேதப்பரப்புதல் ஞாயிற்றுக்கிழமைஎன்பதை அறிவோம். அந்நாட்களில் வேதத்தைப்பரப்பும் கடமையை நாம் நினைவுகூருகிருேம். ஆனல், ஒவ்வோர்வருடமும் தூயஆவியானவரின் ஞாயிற்றுக்கிழமையில் மற்ருேர்விதமான விசுவாசப்பரப்புதல் தொண்டொன்று உண்டு. அதை வியாதிஸ்தரின் வேதப்பரப்புதல் ஞாயிறுஎன்று அழைக்கிருேம். இந்தநாளிலே பாப்பாசரின் வேதபோதக நோக்கங்களுக்காகக் கிறீஸ்துவர்கள் தாங்கள்அனுபவிக்கும் வருத்தம், கஷ்டம், துன்பம் முதலியவைகளை ஒப்புக்கொடுக்கும்படி அவரே கேட்டுக்கொள்ளுகிருர். மனிதருக்குநேரிடும் துன்பவருத்தங்கள் தின்மைகள் அல்ல. ஆனல், திருச்சபையின் வளர்ச்சிக்காக ஒப்புக்கொடுக்கப்படும்வழிகளிலே அவைகள் ஓர்தங்கச் சுரங்கம்என உலகுக்குக் காட்டும் தீபமாகும். விசுவாசப்பரப்புதலுக்காக நாம்ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் பொக்கிஷம். உலகத்தில் துன்பமில்லாத இடமொன்றுமில்லை. துன்பம்படாதவர் யாருமில்லை. இவர்களுக்குத் துன்பதுயரங்களால் பலிக்கும் மகாப் பெரியநம்பிக்கையை விளக்கிக் காட்ட வேதாகமபுத்தகங்களே அத்தாட்சியாகும். "இக்காலத்தின் துன்பதுரிதங்கள் இனிநம்மிடத்தில் வெளிப்படப்போகிற மகிமைக்குச் சரிதகைமையானதல்லஎன்று எண்ணுகிறேன் (உரோ. 8 : 18).

"நான் உங்கள்நிமித்தம் அனுபவிக்கிறபாடுகளில் சந்தோஷித்து, கிறீஸ்துவின்பாடுகளில் குறைவாயிருப்பதை அவருடையசரீரமாகிய திருச்சபைக்காக மாமிசத்தில் நிறைவேற்றி வருகிறேன்" (கொலோ. 2 : 24).

"கிறீஸ்துநாதருடைய மகிமை வெளிப்படும்போது நீங்கள்களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதினல் சந்தோஷப்படுங்கள்" (1 இரா. 4 : 13)

அரிய சகோதரரே, இவ்வாண்டு ஆனி 9-ம் திகதி "வியாதிஸ்தரின் ஞாயிறு. இதைவாசிப்போர் துன்பம், கஸ்தியில் மூழ்கியிருப்போருக்கு ஆறுதல் அளித்து, அவர்களின் பீடைகள் விசுவாசப்பரப்புதலுக்கு ஓர்பெரியவழியாயிருக்கும்என்பதை அவர்கள் உணரச் செய்யுங்கள். வைத்திய சாலைகளில் வேலைசெய்வோர், மரியாயின்சேனை அங்கத்தவர்கள், கத்தோலிக்கசேவை செய்வோர் அனைவரும் இந்தஉண்மையைச் சகலரும்அறியச்செய்ய மாட்டீர்களா? இவர்கள் மாத்திரமல்ல, சகலகத்தோலிக்கரும் வியாதிஸ்தரின் ஞாயிறை வேதப்பரப்புதலுக்கு ஏற்ற வழியாக்கப் பிரயாசப்படமாட்டீர்களா? தேவனின் மகிமைக்காக—அவருடையநேசத்திற்காக இவ்வாண்டு இதைத்தொடங்குங்கள்.

நீங்கள்செய்வதை, அனுபவத்தில் அறிந்தவைகளை நமக்கு அறிவிக்கப் பின்வாங்காதேயுங்கள்.

விசுவாசப்பரப்புதலுக்காக மன்ருடலாம். தருமம் கொடுக்கலாம். இவைகளைச் செய்யஇயலாத நோய்வாய்ப்பட்டிருப்போரே! நீங்களும் வேதப்பரப்புதலுக்காகப் பெரியசேவை செய்யலாமென உணர்ந்துகொள்ளுங்கள். அதாவது, வேதப்பரப்புதலுக்காக உங்கள்வருத்தங்களை ஒப்புக்கொடுக்கலாம்.

மனிக் முத்துக்குமாரு சுவாமியார்
தேசியதலைவர்—பாப்பரசரின்சபைகள்

### விசுவாசப்பரப்புதல் சபையின் விளம்பரங்கள்

1. "மிஷன்-செபமாலை" அதாவது, வேதப்பரப்புதல் விஷயமாய்ச் செபமாலை சொல்லும்போது ஒவ்வோர் காரணிக்கத்தையும் ஒவ்வோர் கண்டத்திலுள்ளவர்களுக்காக ஒப்புக்கொடுக்கும்படி ஐந்து நிறங்கள் கொண்ட செபமாலை விரும்புவோர் மேற்றிராசன தலைவரிடம் பெற்றுக்கொள்ளலாம். விலை 1ரூபா 50சதம்.

2. உங்கள்கடமையை நினைவுகூருங்கள். ஒவ்வொருவரும் வேருெருவரை விசுவாசப்பரப்புதல் சபையில் சேர்ப்பது.

3. ஒவ்வொருமாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையிலும் வேதப்பரப்புதல்சபையின் தேசியதலைவரால் பரிசுத்த பாப்பரசரின்சபைகளுக்கு உதவிபுரிவோருக்காக ஓர் திவ்வியபூசைசெய்யப்படும்.

## கிறீஸ்துவின் இராச்சியம்

(மத். 13 : 31)

A. K.

விண்ணுலக இராச்சியம் கடுகுமணிக்கு ஒப்பாயிருக்கிறது. ஒருவன் அதைஎடுத்துத் தன்நிலத்தில்விதைத்தான். அது வித்துக்கள் அனைத்திலும் மிகச்சிறியது. ஆனல், வளரும்போது பூண்டுகள் அனைத்திலும் பெரியதாயிருக்கிறது. கடைசியில் மரமாகிறது. வான்பறவைகள் வந்து அதன்கிளைகளில் கூடுகள்கட்டி வாழ்கின்றன.

கடுகுவிதைமிகமிகச்சிறியது. யூதர்கள் ஒருபொருளையோ, ஆளையோ அலட்சியமாய்க் குறிப்பிடும்போது, நம்நாட்டில் சிலர் 'சுண்டங்காய்' என்று கூறுவதுபோல் அவர்கள் 'கடுகைப்போல்' என்று சொல்வது வழக்கம். அவ்வளவு சிறியவித்து விரைவில் வளர்கிறது. உயர்ந்து செடியாகிக் கிளைகளுடன்நிற்கிறது. அதற்குமுன் மற்றச்செடிகளைச் சிறியபூண்டுகள் எனலாம்.

கடுகுச்செடி ஒருமரமாய் வளர்கிறதுஎன்று நமதுஆண்டவர் உவமையில் கூறியிருப்பதைக் கேட்டதும், ஆலமரத்தையும், புளியமரத்தையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்வது பெருந்தவறு. கடுகிலிருந்து வருவது ஒருசெடியே. ஆனல், அச்செடி உயர்ந்து வளர்ந்திருப்பதால், மற்றப் பூண்டுகளோடு ஒப்பிடும்போது ஒருமரமெனக் கருதலாம் என்பதுவே பொருள்.

இந்தக் கடுகுச்செடி காய்த்ததும் கடுகுமணிகள் ஒருவித வாசனையைக் கமழ்கின்றன. இந்த வாசனையால் கவரப்பட்டு, பலபறவைகள் பெருங்கூட்டமாய் வந்து, கிளைகளில் உட்கார்ந்து, கடுகைக் கொத்தித்தின்று களிப்புறுகின்றன. ஒரு செடியில் அநேகபறவைகள் இப்படி இருப்பதைப்பார்ப்பதே ஒருபெருங்காட்சி.

இந்தக் கடுகுச்செடி உவமையினல் நமதுஆண்டவர் தமது இராச்சியத்தின் பிறப்பையும், வளர்ச்சியையும் எடுத்துரைக்கிருர். கிறீஸ்துவின் இராச்சியத்தைப்பற்றிக் கேட்ட அப்போஸ்தலர்கள் சற்றேதயங்கினர்கள். கவலையுற்ருர்கள். தாங்கள் இத்தனை பெருங்காரியத்தைச் சாதிக்க வல்லவர்களாஎனக் கலக்கங் கொண்டார்கள். யேசு அவர்களுக்கு உற்சாகம் கொடுக்கும்முறையில் இந்த உவமையைக் கூறுகிருர்.


யூதர்கள் மெசியாவையும், அவரது இராச்சியத்தையும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். அவர்கள் எதிர்பார்த்தது ஆடம்பரத்துடனுள்ள ஒரு அரசு. ஆனல், தோன்றியமெசியா மாட்டுத்தொழுவத்தைத் தெரிந்து கொண்டார். எளிய பெண்மகளே அவருடையதாய். தச்சுவேலை பார்க்கும் சூசையே அவரைவளர்க்கும் தந்தை. மோட்ச இராச்சியத்துக்கு உரிமையாளர்களோ எளிமை, மனப்பான்மை உள்ளவர்களாய் இருப்பது அவசியம் என்ருர். அவர் தமது இராச்சியத்தைத் தோற்றுவித்தார். அதன் அடிப்படைக் கற்கள்யார்? ஞானிகளா? நீதிமான்களா? ஆட்சியாளர்களா? தளகர்த்தர்களா? அல்ல. படிப்பற்ற, உலக அனுபவமற்ற, வாளை உபயோகிக்கத் தெரியாத, பொறுமையும், சிறுமையும் கொண்ட பன்னிருயூதர்கள். கடுகுமணிக்கு ஒப்பான இச்சிறு வித்தானது செடியாய் விரைவில் வளரும். பலநாட்டுமக்களும் அச்செடியருகில் வந்துஉண்டு மனநிறைவு கொள்வார்கள். சுமார் ஈராயிரம்ஆண்டுகளுக்கு முன் கூறினர்யேசு இந்தஉவமையை. இப்போது நாம்காண்கிறது என்ன? உலகம் எத்திசையிலும் அந்தத் திருச்சபை பரவிக் கிளைகள்விட்டு மக்களைத்தாங்கி ஆதரித்துவருகிறது.

கத்தோலிக்க மறையில்லாதநாடு உலகிலே இல்லையெனக் கூறலாம். "கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு எல்லாத் திக்குகளிலிருந்தும் அநேகர் கடவுளின் இராச்சியத்தில் பந்தியமர்வார்கள்" (லூக். 13 : 29).

நமதுஆண்டவர் தமதுசீடர்களைப் பார்த்து: "சிறியமந்தையே! அஞ்சவேண்டாம்" என்கிருர். சிறிய மந்தை அந்நாளிலே! ஆனல், இன்றைக்கு! கிரேக்கர்எங்கே! உலகை ஆட்டிவந்த உரோமையர் எங்கே! ஐரோப்பாவையே நடுங்கச்செய்த நெப்போலியன் எங்கே! ஹிற்லர் எங்கே! முசோலினி எங்கே! ஸ்ராலின்எங்கே! இவர்களுடைய இராச்சிய அதிகாரங்கள் எங்கே! இருந்த இடம் தெரியாதபடி கவிழ்ந்தன. நொறுங்கின. சிதறுண்டன. ஆனல், கடுகுமணியைப்போலிருந்த அந்தத் திருச்சபை இப்போது எப்பக்கத்திலும் நிழலைக்கொடுத்து வருகிறது.

கத்தோலிக்காகிய நாம் திருச்சபையின்மக்கள், கிறீஸ்துவின் இராச்சியத்தைச் சேர்ந்தவர்கள் என்று பெருமிதங் கொள்ளவேண்டும். எந்தஇராச்சியம் அழிந்தாலும், ஒழிந்தாலும் கிறீஸ்துவின்இராச்சியம் அழியாதுஎன்று உறுதியாய் நம்பியிருக்கவேண்டும். இக்காலத்தில் நமதுநாட்டில் நம்மைச்சுற்றிச் செய்யப்படும் பொய்பித்தலாட்டப் பிரசாரத்தைக்கண்டு நாம் அஞ்சக்கூடாது. நெறியற்றவர்கள் நம்மைத் தாக்கிப் பிரசுரங்கள் எழுதுவதைக் கண்டுஏமாறக்கூடாது. நமதுபரிசுத்த சபையை அழிக்கவல்லவன் இதுவரையிலும் பிறக்கவில்லை. இனிமேலும் பிறக்கப்போகிறதில்லை. 'நாகவாசல்கள் அதைமேற்கொள்ளா.' ஆனதால் திடனுடன் வாழ்ந்து, நமதுமறை எங்கும்பரவி ஏனையமக்களும் இந்த இராச்சியத்தின்மக்களாய் வந்துசேர வேண்டுமென்று செபிக்கவேண்டும், செயலாற்றவேண்டும், தூயவாழ்க்கை நடத்தவேண்டும்.

கிறீஸ்துஇராசா வாழ்க!
அவரது இராச்சியம் வருக!



## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

திருஇருதயத்தின் இரக்கத்தினலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் விசேஷ அநுக்கிரகத்தினலும், கோடியற்புதவரத்தரான அர்ச். அந்தோனியார், அர்ச். சூசையப்பரின் மன்ருட்டினலும் எனது மூத்தபுதல்வன் வைத்திய ஆங்கிலபரீட்சையில் சித்தியெய்தினர். இன்னும் மற்றும் தொடர்ந்துவரும் பரீட்சைகளிலும் சித்தியெய்தச் சதாசகாயநாயகி தமது சகாயமழையைப் பொழிவாவாக. சதாசகாயமாதாவின் நாமம் எங்கும் புகழப்படுவதாக.

மாதகல் Mrs. மரியநாயகி நாதன்

* * *

பரிசுத்த சதாசகாயமாதாவிடமும், அற்புதவரத்தரான அர்ச். அந்தோனியாரிடமும் விசேஷ பக்திவைத்து என்னை ஒருஆபத்தானவேளையில் காக்கும்படி அவர்களின் உதவியை வேண்டினேன். ஒன்பதுகிழமைக்குள் எனது மன்ருட்டுக் கிடைக்கப்பெற்றேன். பிரசுரிக்கத் தாமதித்ததற்கு மன்னிப்புக்கோரி நேர்த்தியின்படி இதனைப்பிரசுரிக்கிறேன். அவர்களின் நாமம் என்றும் எங்கும் புகழப்படுவதாக.

தாளையடி ஞா. எ.

* * *

நான் நினைத்திருக்கும் காரியம் சித்தியடையவேண்டுமென அர்ச். சதாசகாயமாதாவிடம் மன்ருடினேன். அவ்வன்னையின் சகாயத்தால் எனதுமன்ருட்டு அனுகூலமாயிற்று. அன்னையின் நாமம் என்றும் புகழப்படுவதாக. நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

அந்தரவெவ ச. சந்தியாகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூஷியா மனந்திரும்புமா?

— V. M. Joseph —

(சென்றவாரத் தொடர்ச்சி)

பூசைகாணும் விசுவாசிகளிலே காணப்படும் மிகவும்பாரதூரமான குறைபாடொன்றை இந்தவேளை பலரின் விசேஷகவனத்திற்குக் கொண்டுவருதல் நலமாகும். பூசைமுடிவிலே குருவானவர் அடுத்தார்ப்படியிலே முழந்தாட்படியிட்டு இந்தச்செபங்களை உரத்தசப்தமாகச்சொன்னபோதிலும், விசுவாசிகளின்குரலொலி — அவர்கள் நூற்றுக்கணக்கிலே இருந்தபோதிலும் — அடுத்தாருக்குக் கேட்பது மிகவும்குறைவாகத்தான் இருக்கிறது. பூசைசெய்யும்பொழுது பூசைப்பரிசாரகன் செபங்களை உரத்தசப்தமாய்ச் சொல்லவேண்டுமென்றே குருவானவர் விரும்புகின்றார். அதேபோலப் பூசைகாணும்விசுவாசிகளும் உரத்தசப்தமாய்ப் பதில்சொல்லவேண்டுமென்றே அவர்ஆசிக்கின்றார். இவ்வாறு விசுவாசிகள்எல்லோரும் உரத்தசப்தமாய்ச் செபஞ்செய்வதைக் கேட்கும்பொழுது அவர்சந்தோஷத்தால் உள்ளம்பூரிக்கின்றார்.

இந்தச்செபங்களை வாய்க்குள்ளே முணுமுணுத்துச் சொல்லுவது விசுவாசிகளிடமுள்ள ஓர்தப்பான அபிப்பிராயத்தினாலேதான்என்று எண்ணவேண்டும். "தேவன் எங்கள்இருதயங்களிலிருந்து எழுகின்ற அந்தரங்கமான எண்ணங்களைத்தானும் அறிகின்றானபடியால் செபங்களை உரத்துச் சொல்வதில் விசேஷபலன் ஏற்படப்போவதில்லையென்று பலர் எண்ணக்கூடும். இக்கருத்துச் சரியல்ல. மிகவும் உற்சாகத்துடனும், பிரயாசத்துடனுப் செய்யப்படும்செயலின் பெறுமதியானது உற்சாகமில்லாமலும், பிரயாசைப்படாமலும் பெற்றுக்கொள்ளும் பேறிலும்பார்க்கப் பலன்கூடியதாகவே இருக்குமென்பதுஇயல்பானஎண்ணம். அதுமட்டுமல்ல, பலசெபங்களைஉரத்தசப்தத்துடன் செபிக்குமாறே திருச்சபை விரும்புகின்றதுஎன்பதை "ஆண்டவரே! என் மன்றாட்டைக் கேட்டருளும். என்சப்தம் தேவரீருடைய சந்நிதிமட்டும் வாக்கடவது" என்னும் செபம் புலப்படுத்துகின்றதன்றோ!

இதுமட்டுமல்ல. எமது இரட்சாபெருமானே உரத்தசப்தமாய்க் கூவிச் செய்யப்படும் செபங்களைப்பற்றி என்ன நினைக்கின்றார் என்பதைப்பாருங்கள். அவர் இந்தச்செபங்களை எவ்வளவு விரும்புகின்றார் என்பதற்குத் திருஷ்டாந்தம் காட்டியிருக்கின்றார். ஓர்நாள் அவர் ஜெருசலேமுக்குப் போகும் மார்க்கமாக ஜெரிக்கோவின் வாசலால் வந்தார். ஓர்பெரிய சனத்திரள் அவரைப் பின்தொடர்ந்தபடியால் இயற்கையாகவே சனசந்தடியாகவிருந்தது. பாதைஓரமாகவிருந்த ஓர்குருட்டுப்பிச்சைக்காரனின் செவிகளிலும் இந்த அசாதாரணமான சப்தஞ்சந்தடிவிழுந்தபடியால் என்ன நடக்கிறதென்று அதிசயப்பட்டுப் பக்கத்தில்நின்ற சனங்களைநோக்கி, எதற்காக இவ்வளவு அமளியும், ஆரவாரமும் என்றுவினவினான். அவர்களோ நசரேயனையேசு அவ்வழியாகப் போகின்றாரென விடைபகர்ந்தார்கள். இந்தப் பிச்சைக்காரனும் யேசுக்கிறீஸ்துநாதர் ஆங்காங்கு பலவூர்களிலும் செய்துவரும் புதுமைகளை ஏற்கனவே அறிந்திருக்கவேண்டும். அவன் தனதுமனதில் தைரியத்தைவருவித்துக்கொண்டு, "யேசுவே! தாவீதன் குமாரனே! என்பேரில் இரக்கமாயிரும்" என்று கூச்சலிட்டான். அவன் சப்தம் போட்டுப் பலதடவை உரக்கக்கூவி மற்றவர்களுக்குத் தொல்லைகொடுத்தபடியால் சனங்கள் அவனைச் சப்தம்போடாதிருக்கும்படிஉத்தரவிட்டார்கள். அவனோவென்றால் இன்னும் உரத்தசத்தமாய்க் கூப்பிட்டான்.

அதன்மேல்தான் யேசுநாதர் பாதையோரமாய் நின்று அந்தக்குருடனைத் தம்மிடம் கொண்டுவரச்செய்து அவனைச்சொஸ்தப்படுத்தி ஓர்புதுமையைச் செய்தார். எதற்காகயேசுநாதர் அந்த மனிதன் குளறிச்சப்தம்போட்டு மற்றவர்கட்கும் தொல்லைகொடுத்தபின்பே அவனுக்கு ஓர்புதுமையைச் செய்தார்? அவர்தேவனுக்வே, பாதையோரத்தில் ஓர்பிச்சைக்காரன் இருக்கின்றானென்றும், தன்னைச்சுகப்படுத்த வேண்டுமென அவன் விரும்புகிறானென்றும் நிச்சயமாக அறிந்திருந்தார். அவன் பக்கத்தில்வந்ததும் அவர் தாமாகவே தரித்துநின்று, அவன் அருகில்சென்று அவனைச் சொஸ்தப்படுத்தியிருக்கமுடியும். ஆனால், அவர் அப்படிச்செய்யவில்லை. அம்மனிதன் பன்முறை உரத்துக்கூச்சலிட்டு மன்றாடியதன்பின்னரே அப்போஸ்தலரைக்கொண்டு அம்மனிதனைத்தம்முன்பாக அழைத்துவரப் பண்ணினார். வாய்க்குள் முணுமுணுக்காது உரத்தசப்தமாகச் செபஞ்செய்வதனால் ஏற்படும்நன்மைகளை இப்போது சிந்தித்துப்பாருங்கள்.

நாமும் உரத்தசப்தமாய் இனிமையும், தெளிவுமானகுரலில் செபஞ்செய்யும்முறையைப் பயின்று வரவேண்டும். மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள் என்றுநினைத்து, நமதுகுரலைஉயர்த்த வெட்கப்படவேண்டியதில்லை.

ஜெயந்தாவல்லது செபம். வத்திக்கானுக்கும், இத்தாலிய அரசாங்கத்துக்குமிடையே நெடுங்காலமாக இருந்துவந்தபெரும்பிணக்கைஒழித்து, லத்தறன்உடன்படிக்கைமூலம் இரண்டையும் சமாதானப்படுத்திவைத்த அதேசெபங்களையே திவ்வியபூசைமுடிவில் நாம் குருவானவருடன்சேர்ந்து ரூஷியாவின் மனந்திரும்புதலுக்காகச் சொல்லிவருகிறோம்என்பதைக் கத்தோலிக்கமக்கள் ஒவ்வொருவரும் கருத்திற்கொண்டு அவைகளைப் பயபக்தியாகச் சொல்லிவருமிடத்து — கத்தோலிக்க உலகமுழுவதும் சொல்லிவருமிடத்து — அகிலமுழுவதிலுமுள்ள 48 கோடி கத்தோலிக்க மக்களும் உருக்கமாகவும், உணர்ச்சிப்பெருக்குடனும் சொல்லிவருமிடத்து, அவைகள் எழுவான்தொடக்கம் படுவானீறாகத் தினமும் நிறைவேறுகின்ற திவ்விய பூசைகளின் முடிவிலெல்லாம் தேவசிம்மாசனத்தை இடையறாமல்போயடைந்து நாம்ஆசிக்குங்காரியம் நிச்சயமாகக் கைகூடச்செய்யும்என்பதில் சந்தேகமில்லை. ஆதலால், ரூஷியாவின் மனந்திரும்புதல் கத்தோலிக்கர் ஒவ்வொருவரிலுமே தங்கியுள்ளது. ஆகவே, பூசைமுடிவில் இந்தச்செபங்களில் நாம்தவறாமல் பங்குபற்றக் கரிசனைகொள்வோமாக! அவ்வாறாயின் ரூஷியா மனந்திரும்புமா? ஆம்என்று நாம்எல்லாம் நிசமாகச்சொல்லக்கூடியவர்களாவோம். சுபம்!

---

● வேல்சிலே லாண்டோவறிபட்டினத்திலுள்ள தேவமாதாகோவில் பங்குக்குருவான வண. ஸ்ரான்லி வின்ஸ் சுவாமியார் அப்பட்டினசபையில் ஒருவருடம்மாத்திரம் அங்கத்தவராயிருந்தபின் சமீபத்தில் அதன்மேயராய் ஏகமனதாகத் தெரியப்பெற்றிருக்கின்றார். பிரித்தானியில் மேயர் பதவிக்குத் தெரியப்பெற்ற முதற்குருவானவர் இவரேயாம்.

● உலகில் ஒவ்வோர்நிமிஷமும் சராசரிவீதமாக 170 குழந்தைகள் பிறக்கின்றனஎன்றும், ஒவ்வோர்நிமிஷமும் சாரசரிவீதமாக 80பேர் இறக்கின்றனர்என்றும் ஐக்கியநாடுகளின் புள்ளிவிபரகாரியாலய அறிக்கைதெரிவிக்கின்றது.

# சுதேச வர்த்தமானம்

### அர்ச். சூசையப்பர் திருநாள்

கொழும்புத்துறைத் தாபனத்தின் பரலோகபாதுகாவலராக அங்கு கோவில்கொண்டிருக்கும் அர்ச். சூசையப்பர்திருநாள் சென்ற 26-ந்திகதி ஞாயிறுவாரம்பக்திச்சிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. அன்றுகாலை மாதவவளனாரின் ஆலயமானது அழகுபொலிந்து விளங்க, சங். கன்னியாஸ்திரிமாரும், ஆசிரியர் ஆசிரியைகளும், ஆசிரியமாணவர் மாணவிகளும் மற்றும் திரளான பக்தர்களும் தேங்கியிருக்க, தாபனதலைவர் வண. பி. தீயோ தூப்பிள்ளை சுவாமியவர்களால் திருநாள் பாடற்பூசை நிறைவேறியது. சாயந்தரம் குருமாரும், கன்னியாஸ்திரிமாரும், பெருந்திரளான பக்தர்களும் சமுகமாகத் தாபனதலைவர் சுவாமியவர்கள் மாலைஆராதனை பாடியதன்மேல் பக்தகோடிகள் புடைசூழத் தமதுசெங்கரத்தில் தேவபாலனையும், தேமலர்க் கொடியையும்ஏந்திய சஞ்சூசைமாதவனார் தமதுதிருமகனுருடன் திருச்சிரசில் செம்பொன்முடிகவித்து, பரிமளமுல்லைமலர்மாலைதரித்து, வதனத்தில் பேரழகும், பேரருளும்பரிமளிக்க, பக்திப்பரவசமளித்துக்கொண்டே சிங்காரவீதியினூடாகப் பூந்தேர்மீது பவனிசென்று தாபனமைதானத்தின்முன்பாக அலங்காரசிங்காசனத் தெழுந்தருளினார். அத்தருணம் வண. பிரான்சீஸ் சேவியர் சுவாமியவர்கள் சஞ்சூசையப்பர் மகா நீதிமான்என்பதையும், பிதாவாகிய சர்வேசுரனின் நம்பிக்கைக்குரியவர்என்பதையும், அவரது அடைக்கலத்தை நாடவேண்டிய தன் ஆவசியகத்தையும் விளக்கிக்காட்டி, எல்லோரும் சிந்தைகளிக்க அரியதோர் பிரசங்கஞ்செய்தார். அதன்மேல் வழமைபோல அடைக்கலப்பிதாவின் அடைக்கலநிழலிலே நமதுமேற்றிராணிபாண்டவர்முதல் விசுவாசிகளீறாகச் சகலரும் ஒப்படைக்கப்பெற்று விசேஷவிண்ணப்பங்களும் செய்யப்படலாயின. பின்னர் திருப்பவனி ஆலயத்தைஅடைந்ததும் திவ்விய சற்பிரசாதஆசீர்வாதமும், திருச்சுரூபஆசீர்வாதமும் அருளப்பெற்றுத் திருநாள் இனிதே நிறைவாயிற்று.

### பாஷைப்பிரச்சினைப் போட்டிப்பிரசுரம்

அரசாங்கம் தான்அனுட்டிக்கப்போகும் மொழிக்கொள்கையை விளக்கும் பிரசாரதுண்டுப்பிரசுரங்களைத் தமிழ்ப்பிரதேசங்களில் பரப்பத்தொடங்கும்போது, அவைகளை ஏற்றுக்கொள்வதில்லையென்ற எதிர்ப்பிரசார துண்டுப்பிரசுரங்களும் ஏராளமாகப் பரப்பப்படவிருக்கின்றன. தமிழ்பற்றியஅரசாங்கத்தின்கொள்கை தமிழ்மக்களுக்கு உதவாதென்று எடுத்துக்காட்டும் எதிர்ப்பிரசார துண்டுப்பிரசுரங்களைச் சர்வகலாசாலைப் பேராசிரியர்களான தமிழர்கள் வெளியிடஉத்தேசித்திருக்கிறார்கள். தமிழ்மொழிக்குரிய அந்தஸ்துப்பற்றிப் பாராளுமன்றத்திலே பிரதமர்தெரிவித்த விளக்கத்தைஆட்சேபித்து எதிர்ப்புத்தெரிவித்த ஏழுபேராசிரியர்களினதும் கையெழுத்துகள் இத்துண்டுப்பிரசுரங்களில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### விமானச்சலார் ஏற்றம்

ஏர் சிலோன் ஸ்தாபனமும், இந்திய ஏர் லைன்ஸ் ஸ்தாபனமும், கொழும்பு-சென்னை, கொழும்பு-திருச்சினுப்பள்ளி விமானப்பிரயாணசலாரை உயர்த்தியிருக்கின்றன. புதியசலார்விகிதங்கள் வருமாறு: கொழும்பு-திருச்சினுப்பள்ளிபோக 75 ரூபா, போய்வர 143 ரூபா. கொழும்பு-சென்னை போக 113 ரூபா, போய்வர 215 ரூபா. இப்புதிய விகிதங்கள் இம்மாதமுதல் நடைமுறைக்கு வந்திருக்கின்றன. இந்த விமானப்பிரயாண சேவைகளை நடத்துஞ்செலவுகள் அதிகரித்திருப்பதே சலாரேற்றத்துக்குக் காரணமாகும்.

### பிக்குகள்பெரமுனை•தயார்

நாட்டின் எப்பகுதியிலாவது பலாத்காரம் பயன்படுத்தப்பட்டுக் கொந்தளிப்பு ஏற்படுமானால், அதனைத்தடைசெய்து சமாதானத்தைநிலைநாட்டுவதிலே உதவிசெய்ய ஐக்கியபிக்குகள் பெரமுனை எப்போதும்தயாராகத்தான் இருக்கிறதென்று அதன் காரியதரிசியான இரத்னசாரதேரோஎன்ற புத்தபிக்கு தெரிவித்திருக்கின்றார். கலகங்கள் ஏற்படும்பகுதிகளில் அவ்வப்போது பிக்குகளும், தொண்டர்களுந்தோன்றி மக்களின் ஆவேசத்தைத் தணித்து, அமைதியாய்இருக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொள்வார்களென்றும், தமிழருக்கும், பிக்குகள்பெரமுனைக்கும் எவ்விதமனக்கசப்போ, வெறுப்போ இல்லையென்றும் தனிச்சிங்களசட்டத்தை உறுதியாகப் பாதுகாப்பதுதான் பிக்குகள்பெரமுனையின் நோக்கமென்றும், நியாயமான அளவு தமிழ்மொழிஉபயோகவிஷயமாய்ப் பிரதமர்பண்டாரநாயகா தமிழருக்குவழங்க முன்வந்துள்ள நான்குசலுகைகளையும் ஏற்றுக்கொள்ளும் நிலையில்தான் தமிழர்கள் மனம்மாறி வருகிறார்களென்றும் இந்தப் பிக்குகள்பெரமுனைக் காரியதரிசியான பிக்குகூறுகின்றார்.

### வெளிநாடுசெல்ல அனுமதியில்லை

தமிழரசுக்கட்சி ஆவணிமாதம்நடத்த உத்தேசித்திருக்கும் சத்தியாக்கிரகம் முடிகிறவரையிலே பாதுகாப்புமந்திரி காரியாலயத்தின் அனுமதியில்லாது எவருமே இலங்கையைவிட்டு வெளிநாடுகளுக்குச்செல்ல அனுவதிக்கப்படமாட்டார்கள். சத்தியாக்கிரக இயக்கத்தை உத்தேசித்து நாட்டில் பீதிநிலவியிருப்பதே பிரதமர்விடுத்துள்ள இந்த உத்தரவுக்குக் காரணமென்று கூறப்படுகிறது. ஆவணிக்குமுன் வெளிநாடுகளுக்குச்செல்லும் இலங்கையர்கள் ஆவணிஇயக்கத்தின்போது தங்கள்உறவினரைப்பற்றிக் கவலைப்பட நேரிடுமென்றும், பிரதமரின் இந்தஉத்தரவு அந்தக்கவலையை நீக்கிவிட்டதென்றும் சொல்லப்படுகிறது. அதனால் வருகிற ஆடிமாதம் 28-ந் திகதியன்று மஸ்கோ நகரில் நடைபெறவிருக்கும் வாலிபர் விழாவில் கலந்துகொள்ளவிருந்த 500 இலங்கையரும் அங்குசெல்ல அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. ஆவணி இறுதிவரை எந்தஇலங்கையரும் வெளிநாடுசெல்ல விசாவழங்கப்படாதென்றும், ஒருவரின் வெளிநாட்டுப்பிரயாணம் அவசியமெனக் கண்டால்மாத்திரம் விசாவழங்கலாமென்றும் பிரதமர் தமது நிரந்தரகாரியதரிசிக்கு அறிவித்திருக்கின்றார்.

### தமிழ் எம். பி. களின் பகிஷ்காரம்

இலங்கைப் பாராளுமன்றத்தின் இரண்டாவதுகூட்டத்திறப்புவிழா வருகிற13-ந்திகதி நடைபெறவிருக்கிறது. கவர்னர்-ஜெனறல் அதனைஆரம்பித்துவைத்துத் தமது சிம்மாசனப்பிரசங்கத்தைச் சிங்களத்தில் நிகழ்த்தவிருப்பதால் தமிழ்எம். பி.கள் திறப்புவிழாவைப் பகிஷ்கரிக்கவிருக்கின்றார்கள். சிங்களத்தில் நிகழ்த்தப்படும் சிம்மாசனப்பிரசங்கம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும். தமிழ்மொழிபெயர்ப்பு இருக்கமாட்டாது.

### சயரோகக் குழந்தைகள்

இலங்கையிலே பத்துவயதுக் குட்பட்டவர்களாய்ச்சுமார் 64,000 பிள்ளைகள் சயரோகத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிறார்களென்று சுகாதாரஅதிகாரிகள் நடத்தியபரிசோதனைமூலம் கண்டறிந்திருக்கிறார்கள். சென்றவருடம் கிடைத்த கணக்கின்படி 318பேர் சயரோகத்தினால் மடிந்திருக்கின்றனர். 6,952பேர் பல்வேறு ஆஸ்பத்திரிகளில் சயரோகசிகிச்சை பெற்றிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனி மாதம்

யேசுவின் திரு இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்.

**பொதுக்கருத்து:** கிறீஸ்துநாதரின் தயாளமுள்ள அன்பைஏற்று மக்கள் மெய்யானதபசுக்கு அழைக்கப்படுவதற்காய் வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** ஸ்கான்டிநேவியாவும், சுற்றுப்புற நாடுகளும் திருச்சபையின் ஒற்றுமைக்கு வந்து சேரும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
# பாதுகாவலன்

1957-ம் ஆண்டு
ஆனி மாதம் 6-ந்திகதி

## தூய ஆவியானவர்

கிறீஸ்துநாதரின் மகிமை நிறைந்த உத்தானத்துக்குப்பின் ஐம்பதாம்நாளில்வரும் பரிசுத்த ஆவியானவரின் வருகைத்தினம் ஒவ்வொரு கிறீஸ்தவனுக்கும் ஆனந்தமான ஓர்தினம். பரிசுத்தஆவியானவரைச் சங்கிக்குந்தினம். நாம்ஒவ்வொருவரும் மகிழ்வுடன் கொண்டாடவேண்டிய தினம்.

இதனை யொட்டியசம்பவம் நாமெல்லோரும் அறிந்ததே. வெளியிலே புறப்படப்பயந்து நடுக்கமுற்றிருந்த சீடர்கள் மூச்சுக் கேட்கவிடாமல் கதவுகளை உள்ளேதாளிட்டுக் கொண்டார்கள். யூதரின் தாக்குதலுக்குப் பயந்து இந்தஆயத்தமும், அரண் அமைப்பும் ஏற்படுத்திபிருந்தார்கள். திருமீட்பர் பரலோகஞ் சென்றுவிட்டார். கன்னிமரியம்மாள்மாத்திரம் அவர்களுடைய தஞ்சம். சடுதியாய்க் கடுங்காற்று வீசும் சப்தம். செட்டைகள்பல அடிப்பதுபோன்ற ஒலி. அசனசாலையில் இருந்த ஒவ்வொருவர் தலைமேலும் நெருப்புக்கொழுந்துகள் சுவாலைவிட்டு எரிந்தன. பரிசுத்தஆவியானவர் அவர்களிடம் எழுந்தருளிவிட்டார் என்றதற்கு அது ஓர்குறி. அந்த அக்கினி நேரம்வரைக்கும் சீடர்கள் மனஞ் சோர்ந்து அலை வாய்ப்பட்டுப் பயந்திருந்தார்கள். தூயஆவியுடைய உணர்ச்சியும், ஆறுதலும் தரும் பிரசன்னத்தால அந்த நேரமே அவர்கள் உறுதிபெற்ருர்கள். புத்துணர்ச்சி கடல் மடை திறந்ததுபோலாயிற்று. மலையையும் சுமக்கும் புதுவீரம் பெற்ருர்கள். கிறீஸ்துநாதருக்காக எண்ணுமற்றுணிய வரம் பெற்ருர்கள்.

தூயஆவியானவரின் இந்த அற்புதபிரசன்னம் இருநோக்கங்களைக் கொண்டது. யேசுக்கிறீஸ்துநாதர் அடியிட்டு ஞான ஆளுகைமுறையும், போதகப் பொருளும், அர்ச்சிக்கும் வழிகளும் ஏற்படுத்தித்தந்த திருச்சபைக்கு உயிர்தந்து, வழிகாட்டி, அதைவளம்பெறச்செய்துகாத்து வருவதுஒன்று. மற்றது, தகுந்த பக்குவமுள்ள மனிதஆத்துமங்களில் அதிபரிசுத்தஆவியானவர் தமதுபிரசன்னத்தை உறுதிப்படுத்துவது. இந்தஇருநோக்கங்களும் கிறீஸ்தவர்களுக்கும், யேசுக்கிறீஸ்துநாதரின் உண்மைத் திருச்சபையில் சேர்ந்திருக்கிறதாக மனப்பால்குடித்துத் தங்களைக் கிறீஸ்துவர்என அழைத்துக்கொள்வோருக்கும் முக்கியத்துவமுள்ளன.

எமதுசரீரங்கள் தூயஆவியின் ஆலயங்களெனச் சம்பாவிலு அப்போஸ்தலர் அடிக்கடி குறிப்பிடுகிருர். தூயஆவியின் வரத்தை அடைய மனிதர் இருவித பக்குவங்கள் உள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்றும் வற்புறுத்துகிருர். தேவசமூகத்தில் சுத்தமான இருதயமுள்ளோராய் இருப்பதும், கிறீஸ்துநாதரைத் தலைவராகக்கொண்ட உயிருள்ள திருச்சபையில் உயிர்பெற்று உழைப்போராயிருப்பதுமே வேண்டிய பக்குவங்களாகும்.

மனிதன் ஆத்துமமும், சரீரமுங் கொண்டவன். சித்துப் பொருளான ஆத்துமம் சரீரத்துக்கு உயிரளிக்கிறது. காலோ, கையோ உடலிலிருந்து துண்டிக்கப்படுமானல் அது பழுதுற்று அழியும். ஆகையால், எவனுவது பூரணஅறிவுடன் வேதபேதகத்தினல் தன்னைக் கிறீஸ்துநாதரின் மறைஉடலாம் திருச்சபையிலிருந்து பிரித்துக்கொண்டால் அவன் தூயஆவியின் பிரசன்னத்தை இழந்துவிடுகிருன்.

மூதற் பெந்தெக்கோஸ்து தினத்திலிருந்தேதனதுஉற்பத்தி எனக் கூறக்கூடியது கத்தோலிக்கதிருச்சபை மாத்திரமேஎன்பது மறுக்கமுடியாத சரித்திர உண்மை. உலகமக்கள் சுவிசேஷப்போதனையைக் கேட்டதும் அன்றுதான். இந்தத்திருச்சபை பேதுருஎனும் கல்லின்மேற் கட்டப்பட்டது. இதன் தலைவரான கிறீஸ்துநாதர் உலகமுடிவுபரியந்தம் திருச்சபையுடன் இருக்கிருர்.

கிறீஸ்துநாதரின் ஏகமெய்யான சபையில் (இன்னும்) கண்காணும்அங்கத்துவம் அடையாதவன் உண்மையைஅறியவும், ஒப்புக்கொள்ளவும்வேண்டிய ஞான வெளிச்சத்தையும், ஏவுதலையும் தேவனிடம் இரந்துகேட்கக்கடவான்.

நமக்குத் தம்முடைய தேவஞானத்தையும், அன்பையுந்தந்து நமது ஆத்துமங்களை உண்மையாய் அர்ச்சிக்கவும், உலகமுகத்தைப் புதுப்பிக்கவும் தூயஆவியானவரை வேண்டுவோமாக.

---

## தமிழரின் துக்கதினம்

இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்கள். ஆனிமாதம் 5-ந் திகதியாகிய நேற்றைத்தினத்தை ஓர் துக்கநாளாகக் கொண்டாடினர்கள். இற்றைக்கு ஓராண்டின் முன் இந்தத்திகதியில் தான் தனிச்சிங்களசட்டம் பிரதமர் பண்டாரநாயகாவால் பாராளுமன்றத்தில் புகுத்தப்பட்டது. அதுகாலவரை சகோதரர்கள் போல—ஒருதாய்வயிற்றுப் பிள்ளைகள்போல ஐக்கியமாகவாழ்ந்திருந்தசிங்களர், தமிழரிடையே தீராப்பிணக்கை உண்டுபண்ணிவிட்ட இந்தச்சட்டத்தை—தமிழ்மொழிக்கும், தமிழினத்துக்கும் அநீதியையும், அவமதிப்பையும் உண்டுபண்ணிவிட்ட இந்தச்சட்டத்தைத் தமிழ்ப்பேசும்மக்கள் துவேஷிப்பதும், அதையிட்டுக் கண்ணுறங்காது ஆட்சேபித்து வருவதும், அது பாராளுமன்றத்தில் புகுத்தப்பட்டநாளைத் துக்கநாளாகக் கொண்டாடியதும் ஆச்சரியமன்று. மக்கள்அரசாங்கமெனத் தன்னைப்பெருமையடித்துக்கொள்ளும் இந்தஅரசாங்கம் என்றுஅதிகாரத்துக்கு வந்ததோ அன்றுபிறந்தது இலங்கைக்குஓர்அனர்த்தகாலம். வகுப்புத்துவேஷம், சமயத்துவேஷம், மொழித்துவேஷம், கட்சித்துவேஷம், பேச்சுத்துவேஷம், கண்டனதுவேஷம் என்பனவாக எத்தனையோ துவேஷங்கள் புற்றீசல்கள்போல்புறப்பட்டு மக்களைப் பிளவுபடுத்தி, அவர்களிடையேஇருந்துவந்த சமாதானத்தைப் பங்கப்படுத்தி, நாட்டையே இரண்டுபடுத்தி விட்டிருக்கின்றன. புத்தகம்மிஷன் அறிக்கையென்ற போர்வையிலே கத்தோலிக்கசமயத்துக்கும், கத்தோலிக்கருக்கும் இழைக்கப்படுகிறவைகள் ஏனைய சமயத்தவர்களுக்குமே இப்போது நன்ருகப்புலப்படுகின்றன.

நிற்க, மேற்குஜேர்மனி என்பது கத்தோலிக்கமக்களையே பெரும்பான்மையினராகக் கொண்டுள்ள ஓர் சமஷ்டிநாடாகும். இந்தநாட்டிலே புத்தசமயப் பிரசாரஞ்செய்வதற்கென—அதாவது அம்மதத்தைப் போதிப்பதற்கென இம்மாதம் 11-ந் திகதி போசன் பௌர்ணமியன்று மிகுந்தலையிலிருந்து புத்தமிஷனரிமாரின் கோஷ்டிஒன்று பெரும்ஆரவாரத்துடன் புறப்பட்டுச் செல்ல ஆயத்தப்படுகின்றது. இந்தஎடுப்பு இன்றுநேற்று எடுக்கப்பட்டதன்று. எத்தனையோ ஆண்டுகளாக ஆங்காங்கெல்லாம் அலைந்துலைந்து பணஞ்சேகரித்துப் படாதபாடெல்லாம் பட்டுக் கடைசியாக மலைநொந்து சுண்டெலியைப் பெற்றெடுத்தவாருய்ப்பிறந்த இந்த மிஷனரிய புத்தகுருமார்கோஷ்டியையுநாமும் மனப்பூர்வமாக வாழ்த்துகின்ருேம். ஆனல், கத்தோலிக்க மேற்குஜேர்மனியிலே புத்தமதத்தை ஸ்தாபிக்கச்செல்லும் இந்தக்கோஷ்டியினர் சமீபகாலத்திலே இலங்கைக் கத்தோலிக்க மக்களின்மனதை வெகுவாகப் புண்படுத்திய சமயதுவேஷமான இருநூல்களையும்—அதாவது பரிசுத்த கன்னிமரியாயைக்குறித்து ஒருபுத்தகுருவே அத்துணை படுதூஷணமாய் எழுதி அச்சிட்டுப் பரப்பிய "கன்னிமரியாகே ஹெற்றி," "அந்துறென் எலியாற்ரு" என்ற இருசிறுநூல்களையும் ஜேர்மனியிலே கால்வைத்ததும் ஜேர்மன்பாஷையில் மொழிபெயர்த்து அச்சிட்டுப்பரப்புவார்களானல் அங்கே இவர்களின் புத்தசமயப்பிரசாரத்திற்கு ஓர் அச்சாரமாயிருக்கும். அம்மட்டா! புத்தகம்மிஷனின் அறிக்கையையும், அதன் உண்மைப் போக்கையும் அங்குள்ள கத்தோலிக்கமக்களுக்கு இந்தப்புத்த மிஷனரிமார் விளக்கிக்காட்டுவார்களானல் இவர்களின் புத்த சமயப்பிரசாரத்துக்கு இதுவும் மிகமிகப்பயன்படுவதாகும்.

எம். ஈ. பி. என்ற மக்கள்அரசாங்கம் திரு. பண்டாரநாயகாவைப் பிரதமராகக்கொண்டு அதிகாரத்துக்கு வந்தநாள்முதல் கத்தோலிக்கர்மட்டில் எத்துணை மனப்பான்மை கொண்டுள்ளதென்பதை அதன்நடவடிக்கைகளே துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றன. கன்னிசுத்தமரியாயை அவமதித்துக் கத்தோலிக்க சமயதுவேஷங்கொண்ட அந்தப்புத்தபிக்கு பிசாசுதானும் துணியமாட்டாதவகையிலே அத்துணைநிந்தாட்சணையாய் எழுதிப் பிரசுரஞ்செய்த இருசிறுநூல்களையும் விலக்கவோ, அன்றேல் அந்தப்புத்தகுருவுக்குத் தகுந்த எச்சரிக்கைவிடுக்கவோ இந்தமக்கள் அரசாங்கம் இதுவரையாதும் நடவடிக்கை எடுக்காததென்ன? ஆனல், அரசினர் ஆஸ்பத்திரிகளிலிருந்து தாதிமாரான சங். கன்னியாஸ்திரிமாரை அகற்றிவிடுமாறு தீவிரநடவடிக்கைஎடுக்க முன்வந்துள்ளதென்ன? பொலனறுவையிலே கத்தோலிக்க கோவில்ஒன்று கட்டுவதற்கு முந்தியஅரசாங்கம் சம்மதித்திருக்க, இந்த மக்கள்அரசாங்கம் அதற்குச் சம்மதியளிக்க மறுத்ததென்ன? உதவிநன்கொடைபெறும் பாடசாலைகள் அரசினர் பாடசாலைகளாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றகிளர்ச்சி எழுந்ததற்கும், அத்தகையபாடசாலைகளைச் சமயஸ்தாபனங்கள் வைகாசி 8-ந்திகதிக்குப்பின் நவமாகத் திறக்கப்படாதென்ற உத்தரவுபிறந்ததற்கும் காரணமென்ன? கத்தோலிக்க சமயத்தின் மட்டிலுள்ள துவேஷமனப்பான்மையேயல்லாது வேறென்ன?

எம். ஈ. பி. அரசாங்கத்தில் அநேக கத்தோலிக்க பிரதிநிதிகள் இருக்கின்றனர்; தாங்கள் உண்மையான கத்தோலிக்கரென்று இவர்களிற்சிலர் பகிரங்கமேடைகளில்நின்று பறைசாற்றுகின்றனர். பூமியிலுள்ள எந்தஒரு அதிகாரமும் கத்தோலிக்கசமயத்துக்குத் தீங்கிழைக்க முடியாதென்று கத்தோலிக்கமந்திரிஒருவரே கூறியிருக்கின்ருர். ஆனல், கத்தோலிக்கருக்குக் கேடுசூழும் பிரச்சினைகளாகிய முன்சொன்ன கருமங்கள்விஷயமாய் இவர்களில் எவராவது அரசாங்கத்தின் செயல்களையிட்டு ஆட்சேபித்து எதிர்பேசியிருக்கிருர்களா? அதனல் இவர்களில் நம்பிக்கைகொள்வது நலந்தருமா?

---

## வத்திக்கான் குன்று

ஓர்காலம் வத்திக்கான்குன்று குளோடியஸ்சக்கிரவர்த்திக்குச் சொந்தமாயிருந்ததென்ற பாரம்பரியமானகதையை ஆதரிக்கும் நவமானஅத்தாட்சிகளைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருப்பதாக வத்திக்கான் அதிகாரிகள் தெரிவித்திருக்கிருர்கள். ஆதிக்கிறீஸ்துவர்களை மிகவுங்குரூரத்தனமாகத் துன்புறுத்திய கொடுங்கோலர்களில் குளோடியஸ் சக்கிரவர்த்தியும் ஒருவன். இவன் தனதுஅடிமைகளையும், ஊழியர்களையும்புதைக்க உபயோகித்தஇடத்தை வத்திக்கான்குன்றின் வடசாரலில் அகழ்ந்துகண்டறிந்திருப்பதாக ஆராய்ச்சியாளர் பாப்பரசரிடம் கூறியிருக்கின்றனர். மற்றும்காத்திரமான புதைபொருட்களும் கடந்தசில மாதங்களில் அங்கு வெளிவந்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரலோகத்துக்கு எழுந்தருளினார்

( ஸி. எஸ். நாயகம், ஸ்ரேஷன்மாஸ்றர், கெமுபு — மலாயா )

(முன்தொடர்ச்சி)

இனி நமதுகடமையை — எமது சொந்த ஆன்மஇரட்சணிய அலுவலை எவ்விதம்கவனிக்கிறோம் — நிறைவேற்றுகிறோமென ஆராய்வோம். சர்வேசுரன் நம்மைஎதுக்காக உண்டாக்கினார்? "தம்மைஅறிந்து நேசித்துச் சேவிக்கவும், அதனால் நித்தியமோட்ச பாக்கியத்தை அடையவுமே உண்டாக்கினார்" என்று நாமெல்லாரும்படித்திருக்கிறோம். ஆகவே, நாம் உண்டாக்கப்பட்டது மோட்சவாழ்வுக்கேயன்றி இந்தஉலகவாழ்வுக்குமல்ல, நரகவாழ்வுக்குமல்ல. வேணும்வேண்டாம் நாம ஒருநாள் இவ்வுலகவாழ்வைநீத்து மறுவுலகவாழ்வில் பிரவேசிக்கவேண்டியவர்கள். நமக்கு ஓர்ஆத்துமம்உண்டு; நரகம்உண்டு; மோட்சம்உண்டு; நித்தியசீவியம் உண்டுஎன்று நம்மில்சிந்தித்து நடக்கிறவர்கள் எத்தனைபேர்? மிகச்சிலரேஎனலாம். அப்படியானால் ஏனையவர்கள்பாடு! அவர்கள் சாகாவரம் பெற்றவர்கள்போல் இந்தஉலகமேகதி, இந்தஉலகமே சுவர்க்கமென்றார்போல் எவ்விதபாவம்பழி, நீதிநியாயம், ஈகைஇரக்கம், தயைதாட்சணியம்பாராது, கண்டதேகாட்சி கொண்டதேகோலம் என்றாற்போல் அச்சபயமில்லாது நடக்கிறார்கள். நீதியாகவோ, அநீதியாகவோ காசுபணம், பொருள்பண்டம் தேடுவதும், இன்பசுகபோகங்களை அனுபவிப்பதுமே மனிதன்கதியென நினைத்துநடக்கிறார்கள். இத்தகையோரிலே பணப்பேராசை கொண்டவர்கள், அகந்தை, அழுக்காறு கொண்டவர்கள், சுயநலப்பிரியர்கள், புறணிபேசுகிறவர்கள், மூட்டுச்சாட்டுக்காரர், காமாதுரர், குடிகாரர், சண்டைக்காரர், ஏமாற்றுக்காரர், கொள்ளைக்காரர், குழப்பக்காரர், குடியைக்கெடுப்போர், குடும்பத்தைக் குலைப்போர், ஊரைஇரண்டுபடுத்துவோர், ஊர்ப்புரளிக்காரர், உள்ளொன்றுவைத்துப் புறம்பொன்றுபேசுவோர், நம்பிக்கைத்துரோகஞ் செய்வோர், கூடியிருந்து கழுத்தறுப்போர், கன்னக்கோல் வைப்போர், உபகாரத்துக்கு அபகாரஞ்செய்வோர், பிறர்சொத்துகளை அபகரிப்போர், கோவில்குளம் எட்டிப்பாராதோர், செபதபஞ் செய்யாதோர், தேவதிரவியானுமானங்களைச் சிந்தியாதோர்எனப் பலதிறப்பட்டோர் இருக்கிறனர்.

இவர்களெல்லாம் தாங்கள் நரகத்துக்கே உண்டாக்கப்பட்டாற்போன்று நடக்கிறார்கள். இவர்கள் அக்கிரமங்கள்புரிவதிலே தாகங்கொண்டவர்கள்போல காணப்படுகிறார்கள். அவ்வாறாயின் இவர்களுக்கு ஈடேற்றமெங்கே? இரட்சணியமெங்கே? கிறீஸ்துநாதர் தமது பாகமாகிய கடமையை நிறைவேற்றியமுறைக்கும், நாம் நமதுபாகமாகியகடமையை நிறைவேற்றிவருகிற முறைக்கும் எத்துணை பாரதூரமான வித்தியாசம்! நமது இரட்சணியத்துக்கு நாமே பொறுப்பாளிகளல்லாது, கிறீஸ்துநாதருமல்ல, தேவபிதாவுமல்ல. கிறீஸ்துநாதர் ஓர்கிமிஷந்தன்னும் வீணில்செலவழியாது கடைசிமூச்சு விடுகிறபரியந்தம் இரட்சணியபேச்சிலும், இரட்சணிய அலுவலிலுமே ஊக்கமாயிருந்தார். நாமோ ஒவ்வோர்நிமிஷத்தையும் நமதுஇரட்சணியத்துக்கு எதிரிடையான பாவகாரியங்களிலேயே, பேச்சிலும்,கிரிகையிலுமே ஊக்கமாயிருக்கிறோம்.

நிற்க, நாம்இப்போது கிறீஸ்துநாதர் பக்கமாகத் திரும்புவோம். அவர் மரித்து உயிர்த்தபின் இப்பூவுலகில் நாற்பதுநாள் இருந்தார். இந்த நாற்பதுநாளும் தாம் உயிர்த்தெழுந்ததைப் பலதிருஷ்டாந்தங்களாலும் அத்தாட்சிப்படுத்தித் தமதுசீஷர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தித் தமது இரட்சணியதொண்டை இவர்கள் தொடர்ந்து நடத்துவதற்கும், தமது திருச்சபையை ஆண்டுநடத்துவதற்கும் வேண்டியகாரியங்களிலே அவர்களைப் பயிற்றியெடுப்பதில் ஈடுபட்டிருந்தார். நாற்பதாம்நாள் தாம்இரத்தவேர்வை சிந்திய ஒலிவேத்மலைக்கு அவர்களையும் கூட்டிக்கொண்டுபோய்ச் சொல்லவேண்டிய புத்திமதிகளையெல்லாம் சொல்லியபின்: "இனி உங்கள்மேல் எழுந்தருளிவரப்போகிற இஸ்பிரீத்துசாந்துவின் வல்லமையை நீங்கள் அடைந்து, ஜெருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமேரியாவிலும, பூமியின்கடைசிமட்டும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்று சொல்லியபின் அவர்கள் பார்த்துக்கொண்டுநிற்க உயரஎழுந்தருளினார். அவர் பரலோகத்திற்கு எழுந்தருளிப் போகிறதை அவர்கள் கூர்ந்துபார்த்துக்கொண்டு நிற்கையில், இதோ! வெண்ணுடை அணிந்தவர்களாகிய இரண்டுபேர் (சம்மனசுகள்) அவர்களருகே வந்துநின்று அவர்களை நோக்கி: "கலிலேய மனிதரே! நீங்கள் ஏன்வானத்தை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்தயேசுநாதர் எப்படிப்பரலோகத்துக்கு எழுந்தருளிப்போகக் கண்டீர்களோ, அப்படியே திரும்பவும் வருவார்"(அ. ந. ப. 1:8 – 11)என்றார்கள். "திரும்பவும் வருவார்" என்ற வாக்கியத்தைக் கருத்தாய் மனதில் பதியுங்கள். இவ்விதமாகக் கிறீஸ்துநாதர் தமது பூலோக இரட்சணிய அலுவலைச் சம்பூரணமாய்—வெற்றிகரமாய் முடித்துக்கொண்டு, மோட்சவாசலை எமக்குத் திறக்கும்பொருட்டும், இவ்வுலகில் தாம் ஏற்படுத்திய இராச்சியபாரத்தைத் தமதுபிதாவின்பாதத்தில் சமர்ப்பிக்கும்பொருட்டும் மூகில்களை ஊடறுத்து மிகுந்த மகிமைப்பிரதாபத்துடன் பரலோகம்சென்றார்.

எனவே, நமதுமூத்தசகோதரராகிய கிறீஸ்துநாதர் எவ்விதம் தமதுபங்காகக் குறிக்கப்பட்ட இரட்சணியவேலையைப் பூரணப்படுத்திப் பிதாவிடமிருந்து வந்ததுபோல் மீண்டும் பிதாவிடம் போய்ச்சேர்ந்தாரோ, அதேபோன்று நாமும் நமதுபங்காகக் குறிக்கப்பட்ட நமது இரட்சணிய அலுவலைப் பூரணப்படுத்தி உத்தானநாளில் மகிமையுடன் உயிர்த்தெழுந்து நமது பிதாவிடம் போய்ச்சேரக் கிறீஸ்துநாதரின் முன்மாதிரிகையைக் கண்டு பாவித்துநடக்க வருந்துவது எமது கடனாகும்.

## தமிழ்க்காங்கிரஸ் தீர்மானம்

அகில-இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் காரியக்கமிட்டி சென்ற 3-ந் திகதியன்று தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் தலைமையில்கூடியபோது, பின்வரும்பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது: "கன்னியாஸ்திரிமாரான தாதிகளின் சேவையை நிறுத்திவிட அரசாங்கம் நடவடிக்கைஎடுப்பதை அகில-இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் பலமாகக் கண்டிப்பதோடு, அவர்கள் இலங்கைமக்களில் சகலபிரிவாரினதும் அங்கீகாரத்துடனேயே இதுவரை சேவைசெய்து வந்திருப்பதால், அவர்களைச் சேவையிலிருந்து விலக்கிவிடுவது நன்றிகெட்டதும், நிந்தனைக்குரியதுமான ஓர்செயலென்று உறுதியாக அபிப்பிராயப்படுகிறது" என்பதே.

* * *

● பிறசெல்ஸ்நகரின் சர்வதேச பொருட்காட்சியிலே "தேவனின் நகர"மென்ற பரிசுத்தஸ்தானத்தின் காட்சிமண்டபத்தை அமைப்பதில் தாங்களும் பங்குபற்றுவதாக உலகிலுள்ள 52நாடுகளைச்சேர்ந்த கத்தோலிக்கர் உறுதிவாக்களித்திருக்கின்றனர். இந்தமண்டபத்தைஅமைக்க ஓர் கம்மிஷன் நியமிக்கப்பட்டுள்ளது.

## தலைவில் சந்தானுள்நாயகியின் ஆடிமகோற்சவம் 1957

ஆடி 16 : கொடியேற்றம். பிற்பகல் 6-30 ஒவ்வொருஇரவும் நோவேனா.
ஆடி 20 : பிற்பகல் 6-30 பொண்ரிவிக்கல் வெஸ்பேர்ஸ்.
ஆடி 21 : முதற்பெருநாள். காலை 7மணக்குப் பாடற்பூசை.
ஆடி 27 : பிற்பகல் 6-30 பொண்ரிவிக்கல் வெஸ்பேர்ஸ்.
ஆடி 28 : இரண்டாம் பெருநாள். காலை 6-30 பொண். பாடற்பூசை.
ஆடி 25 : சற்பிரசாதப்பெருநாள். இயற்கை-செயற்கைப்பூசைகள் ஏற்கப்படும்.

ஒருசில வாடிவீடுகள் உண்டு. 15-7-57-க்குமுன் வேண்டியவர்கள் எழுதி ஒழுங்குபண்ணவும். பங்குனி நடக்கவேண்டிய பெருநாளுக்கு வாடகைஅனுப்பி வீடு ஒழுங்குசெய்துஇருந்தவர்களுக்கு அவ்வாடகையில் அவ்வீடுகள் பங்குனி 1958-இல் நடைபெறும் பெருநாளுக்குக் கொடுக்கப்படும். ஆடிக்கு வீடுவேண்டியோர் பிரத்தியேகமாக ஒழுங்குசெய்யவேண்டும்.

குளிர்ந்தபானக்கடைகள் தவிர்ந்த ஏனையகடைகள் ஆராதனைவேளைகளில் மூடப்படவேண்டும்.

மோட்டார்க் கொட்டில்கள் வேண்டுவோர் 10-7-57-க்குமுன் எழுதி ஒழுங்கு செய்யவும்.

**அதிவண. ஆர்தர் மாட்டின் பர்நாந்து,**
பரிபாலகர்.

தலைவில், 22-5-57.

## இலவச எக்ஸ்-றே பரிசோதனை

சயரோக நிவாரணசங்க யாழ்ப்பாணக்கிளையின் ஆதரவிலே பொதுமக்களை இலவசமாக எக்ஸ்-றேபடம்பிடித்துப் பரிசோதிக்கும்வேலை இம்மாதம் 5-ந்திகதியாகிய நேற்றைத்தினம் ஆரம்பமாகியிருக்கிறது. இலவசமான இந்தப்பரிசோதனை இம்மாதம் 20-ந்திகதிவரையிலே யாழ்ப்பாணநகரின் பலவேறு பாகங்களிலும் நடைபெறவிருக்கின்றது. இதுசம்பந்தமாய் விடுக்கப்பட்டுள்ள ஓர்வேண்டுகோளிலே, அறியாமையால் வளர்ந்துவரும் சயரோகத்தைப் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் ஒழித்துவிட முடியுமென்றும், அதனால் பொதுமக்களை இலவசமாக எக்ஸ்-றே படம்பிடித்துப் பரிசோதனை நடத்தச்செய்திருக்கும்வசதியை யாவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் கேட்கப்பட்டிருக்கின்றது. இதுவிஷயமாய் நகரிலே பிரசாரகூட்டங்களும் நடைபெறத்தொடங்கியிருக்கின்றன.

## பஸ் விபத்துகள்

வடமராட்சிக் கூட்டுறவுப் போக்குவரத்துச்சங்கத்துக்குச் சொந்தமான பஸ்ஒன்று சென்றதிங்கட்கிழமைகாலை சாவகச்சேரியிலிருந்து சுமார்30பிரயாணிகளையும், 100பலாப்பழங்களையும் ஏற்றிக்கொண்டு பருத்தித்துறையை நோக்கிச்சென்றபோது, சரசாலையிலே பாதையிலிருந்துவிலகிப் பற்றைக்குள் இறங்கிக் குடைசாய்ந்தது. அதனால், 50வயதுள்ள ஓர்மனுஷி பஸ்ஸின்கீழ் அகப்பட்டுநெரிந்து அவ்விடத்திலேயே இறந்துபோயினாள். மூன்றுபெண்களும், ஒருவாலிபரும் பலத்தகாயமடைந்து சாவகச்சேரிஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். அன்றுதினம் ககமுவாவிலிருந்து கதிர்காமத்துக்கு யாத்திரிகர்களை ஏற்றிச்சென்ற பஸ்ஒன்றும் கம்பளைக்குச்சமீபமாகப் பாதையைவிட்டு விலகி விபத்துக்குள்ளாகவே அதில்பிரயாணஞ்செய்த 13 பேர் காயமடைந்தார்கள்.

* * *

● சூரியனிலிருந்து பெறப்படும் விசேஷசக்தியினால்இயங்கும் வானொலி ஒன்று தற்போது ஐக்கிய அமெரிக்க தேசத்திலே விற்பனைக்கு வந்திருக்கிறது. குழாய்களேஇல்லாத இந்த வானொலியை எங்கேவேண்டுமென்றாலும் எடுத்துப்போகலாம். சூரியகிரணங்கள் இல்லாதவேளையில் பட்டறி அல்லது மின்சாரவிசைகொண்டு இதனைஇயக்கலாம்.

● சூரியகிரணங்களைப் பயன்படுத்தி ஐஸ்கட்டியைத் தயாரிக்கும் ஓர்அபூர்வமுறையைப் பீலிக்ஸ் டிறூப் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்திருக்கிறார். இதற்கென்று இவர்செய்திருக்கும் குளிர்சாதனப்பெட்டி மணித்தியாலம் ஐந்துறாத்தல்ஐஸ்கட்டிகளை உற்பத்திசெய்கிறது. இதற்குச்செலவேகிடையாதாம். பலவருடம் நீடித்துஉழைக்கக்கூடியதாம்.

## கண்ணீர்சிந்தும்மாதா ஆலயம்

சிசிலிதீவின் துறைமுகப்பட்டணமாகிய சைருக்குஸ் நகரிலே பிரசித்திபெற்ற "கண்ணீர்சிந்தும்மாதா"வுக்கு ஓர்திருசேத்திரமாக,426அடிஉயரமும்,1,20,000 மக்களைக் கொள்ளக்கூடியதுமான மகாதேவாலயம்ஒன்று கட்டியெழுப்பப்படவிருக்கிறது. இந்தஆலய மாதிரிப்படவிஷயமாய்ச் சைருக்குஸ்அதிமேற்றிராசனம் நடத்தியபோட்டியிலே அநேகம் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளைச்சேர்ந்த பெருந்தொகையானோர் கலந்துகொண்டார்கள். பரீஸ்நகர நிர்மாணசிற்பிகளால் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிப்படமொன்றே தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது. மிச்செல்அன்ட்ரூ, பியேர் பறற்என்ற இந்தச்சிற்பிகள்இருவரும் முதற்பரிசாக 4,600பவுணும், குய்லோம் ஜிலெற், றெனென் சார்ஜர்என்ற மற்றிரு பரீஸ்நகரசிற்பிகள் இரண்டாவதுபரிசிலாக 2,300 பவுணும்பெற்றிருக்கிறார்கள். இந்தமகாதேவாலய நிதிக்கென உலகமுழுவதிலுமிருந்தே பணம் அனுப்பப்பட்டு வருகிறது. கண்ணீர் சிந்தியகன்னித்தாயின் அற்புததிருச்சுரூபத்தைத் தங்கள் வறியஇல்லத்தில் கொண்டிருக்கும் அதிர்ஷ்டத்தைப்பெற்ற அன்ரோனியோ—அன்ரோனினா தம்பதிகளும் அப்போது சிசிலி, இத்தாலி முழுவதிலுமிருந்து தங்களுக்கு வெகுமானமாகக் கிடைத்த 80,000பவுணையும், தங்கவெகுமதிகளையும் இந்தஆலய நிதிக்கே உபகரித்திருக்கிறார்கள்.

● இந்தியபிரதமர் பண்டிதநேரு அவர்கள் தமது பிரதமர்பதவியை இராசினாமாச் செய்துவிட்டுக் காங்கிரஸ் தலைமைப்பதவியை ஏற்கவேண்டுமெனக்கோரும்பிரேரணைஒன்று காங்கிரஸுக்கு வந்திருப்பதாகவும், ஆனிமாதம் 1-ந்திகதி புதுடில்லியில் கூடவிருக்கும் அகில-இந்திய காங்கிரஸ்கமிற்றிக் கூட்டத்தில் இதனைக்கொண்டுவரவிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

● பரிசுத்தஸ்தானத்துக்கும், எத்தியோப்பியாவுக்குமிடையே இராசீய உறவு ஏற்பட்டதைத்தொடர்ந்து, பரிசுத்தபாப்பரசர் எத்தியோப்பியாவுக்கு வத்திக்கானின் முதலாவதுஸ்தானிகராக ஓர் அமெரிக்கரான மொன்சிஞ்ஞோர்யோசெவ் மைக்ஜியோசுவாமியாரை நியமனஞ்செய்திருக்கின்றார். தற்போதுஇவர் வத்திக்கான்இராச்சிய மந்திரி காரியாலயத்தில் ஓர்அதிகாரியாக இருந்துவருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்கை வெண்ணெய்

ஓமர் என்ற ஆராய்ச்சியாளர் செயற்கைவெண்ணெயைத் தயாரித்திருக்கிறார். அவர்கண்டுபிடித்த ஒருபுதுவிஷயம் என்னவென்றால், பாலின் தரத்திற்கும், வெண்ணெய்க்கும் சம்பந்தமில்லையென்பதாகும். ஆகாரங்களை நிறையச்சாப்பிடும் பசுவின்பாலிலிருந்தும் வெண்ணெய்கிடைக்கிறது. ஆகாரம் சரிவர இல்லாமல் அரைப்பட்டினியால்வாடும் பசுவின்பாலிலிருந்தும் வெண்ணெய்கிடைக்கிறது. அதனால் வெண்ணெய்என்ற பொருளின்மூலவஸ்து பசுவின்சரீரசத்துதான். வெண்ணெய் பாலின் தரத்தைப் பொறுத்தது அல்ல. இதைநிரூபிப்பதற்கு அவர் அநேகசோதனைகள் செய்தார். தேங்காய்எண்ணெய், கடலைஎண்ணெய், மற்றும்இரசாயனப்பொருள்கள் முதலியவைகளிலிருந்து அவர்செயற்கைவெண்ணெய் தயாரிக்கிறார். செயற்கை வெண்ணெய்க்குப் புஷ்டியளிக்கும் சக்தி மிகவும்குறைவென்று குறைகூறினார்கள். இதையும்தீர்ப்பதற்காக விற்றமின்சத்துக்களைச் சேர்த்துச் செயற்கைவெண்ணெய் தயாரிக்கப்பட்டது. எண்ணெயை யந்திரக்கருவிகளில் ஊற்றுவதிலிருந்து வெண்ணெயாகமாறிக் காகிதத்தில்மடித்துக் கடைகளுக்கு விற்பனவுக்குச்செல்லத் தகுதியாகும்வரை யாவும் யந்திரங்களே செய்துமுடிகின்றன. ஒருமணிநேரத்திலே 5,500றாத்தல் செயற்கைவெண்ணெய் தயாரிக்க இந்தயந்திரங்கள்பயன்படுகின்றன.

## உமியிலிருந்து செங்கல்

லூசியாயானு சர்வகலாசாலை விஞ்ஞானிகளானபின்னி, டோனூரானும் இருவருஞ்சேர்ந்து உமியிலிருந்து இலேசான—மலிவான செங்கற்கள் தயாரிக்கும் நவீனமுறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். உமி எரிக்கப்படும்போது இரசாயனமாறுதலாகிச் சாம்பலாகிறது. இந்தச்சாம்பலும், மண்ணும் சமஅளவிலே கலக்கப்பட்டு ஆஸ்பால்ட்கூழும்சேர்த்துத் தண்ணீர் விட்டுப்பிசைந்து பிறகுசட்டத்தில் வைத்துக் கற்கள்தயாரிக்கப்பட்டு ஒருவாரம்நிழலில் காயவைத்தபிறகே வெயிலில்உலர்த்துகிறார்கள். கடுமையான சீதோஷ்ணமாறுபாடுகளைத் தாங்கிநிற்கின்றன இந்தநூதனகற்கள்.

## கதிரியக்க ஆபத்துகள்

அணுச்சக்திஆயுதப்பரீட்சைகளினால் கிளம்பும் றேடியோக்கதிரியக்கம் மனிதசமூகத்திற்குக் கணிசமான அளவு தீங்கைவிளைவிக்கலாமென்று பிரபலபிரான்சியடக்றமார் பரீஸ்நகரில் சென்றவெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றிலே எச்சரிக்கை விடுத்துள்ளனர். விஞ்ஞான, வைத்தியப்பத்திரிகையாளர்களின் கூட்டமொன்றில் பேசியபோராசிரியர் றேமண்ட் டர்பின் அவர்கள்பேசியபோது, மனிதஇன உற்பத்தியைக் கருத்தில்கொண்டு பார்க்கும்பொழுது கதிரியக்கம் அதிகரிப்பது கூடாதென்றும், கதிரியக்கம் காரணமாகக் குருடு, பைத்தியம், இரத்தப்பெருக்குமுதலிய வியாதிகள் தலைமுறைதலைமுறையாக வரத் தலைப்படுகின்றனவென்றும் கூறினார். "இப்பொழுது கதிரியக்கம் அதிகரிக்கும்வேகத்தைக் கவனித்தால் இம்மாதிரிவியாதிகள் ஒருதலைமுறையில் இரண்டுமடங்காகப் பெருகுவதைக் காணலாம்" என்று பரீஸ்நகர வைத்தியகல்விப் போதனுபீடத்தைச் சேர்ந்த பத்துப்போாசிரியர்களில் ஒருவரான போாசிரியர் டர்பின் எச்சரிக்கைசெய்து, "அணுசக்தி ஆயுதப் பரீட்சைகள் அணுசக்தியைக் கைத்தொழில் அல்லதுவைத்தியத்திற்குப் பயன்படுத்துதல் போன்றவைகளால் செயற்கையாகக் கதிரியக்கம்பரவுவது வருடாவருடம் அதிகரித்துவருகிறது" என்றார்.



# பல தேசங்களில்

## சளிச்சுரமும் அணுக்குண்டுகளும்

அண்மையிலே ஹொங்கொங்தீவில் மூன்றுலட்சம்பேருக்குத் திடீரெனச் சளிச்சுரம்கண்டது. ஆயிரக்கணக்கான சீனர்கள் தலைவலியோடும், விடாமல் தும்மிக்கொண்டும் ஆஸ்பத்திரிகளை அதிகாலையிலேயே முற்றுகையிடத் தொடங்கிவிட்டார்கள். இத்திடீர் நோயின்விளைவாக வர்த்தகஸ்தாபனங்களில் வேலைசெய்யும் பெரும்பாலான ஊழியர்கள் வேலைக்குப்போகவில்லை. ஆயிரக்கணக்கானமாணவர்கள் பாடசாலைகளுக்குப் போகவில்லை. இந்தக் குழப்பமான நிலைமையிலே "லட்சக்கணக்கான மக்களுக்குத் திடீரெனச் சளிச்சுரம் ஏற்பட்டதற்கு அமெரிக்காவும், ருஷியாவும்தொடர்ந்துநடத்திவரும் அணுகுண்டு, சலவாயுக்குண்டுப் பரீட்சைகளின் விளைவாக உலகின் நாலாபக்கங்களிலும்பரவும் காந்தசக்தியுள்ள விஷக்கிருமிகளே காரணம்" என்று ஹொங்கொங்கில்வெளியாகும் பத்திரிகைகள்கூறின. இத்தகைய சளிச்சுரம் நீங்குவதற்குக் கறற்கிழங்கையும், இலுப்பைக்காய்களையும் அவித்துச்சாப்பிடவேண்டுமென்று ஒருசீனமொழிப் பத்திரிகைசெய்திவெளியிட்டதும இம்மரக்கறிகளின் விலைகள் எட்டுமடங்குஏறிவிட்டனவாம்.

## இராட்சத சலவாயுக்குண்டு

இருவாரங்களின்முன் தனதுமுதலாவது சலவாயுக்குண்டை வெடிக்கச்செய்த பிரித்தானி சென்றவெள்ளிக்கிழமை இரண்டாவது குண்டையும் வெடிக்கச்செய்தது. இதுமுதற்குண்டிலும் மிகப்பெரியதாகும். ஜப்பானிலிருந்து 4,200மைல் தூரத்திலுள்ள கிறிஸ்மஸ்தீவுப் பகுதியில்தான் இந்த இராட்சத குண்டும் வீசப்பட்டது. குண்டுவீசப்படுமுன் அந்தப்பகுதியிலே கப்பல்கள்செல்லாது தடுக்கப்பட்டன. நான்கு எஞ்ஜின்கள்பூட்டிய ஓர்ஜெற் விமானத்திலிருந்து இந்தக்குண்டு வீசப்பட்டது. அதுவெடிப்பதை அவதானிக்கக் குறிக்கப்பட்டசில பத்திரிகைநிருபர்களே அனுமதிக்கப்பட்டார்கள்.

## ஐந்துபெண்மணிகளிலும் முதலாவதாக

கனடாதேச காலண்டர்எனும்கிராமத்தில் அப்போது ஒரேபிரசவத்தில் பிறந்து உலகப்பிரசித்திபெற்ற ஐந்து பெண்மணிகளிலும் தற்போது சீவந்தராயிருப்போர் நால்வரே. இவர்களில் செசிலி டையோன்னே எனும்பெண்மணியே முதன்முதலாக விவாகஞ்செய்யப் போகின்றாள். இவள் குவெபெக் நகரில் ஓர்வானூலிஎஞ்சினியரான 25 வயதுடைய பிலிப் லாங்கோயிஸ்என்பவரை வருகிறபுரட்டாசியில் விவாகஞ்செய்யத் திட்டமிட்டிருப்பதாக ரொறண்ரோநகரிலிருந்து அறிவிக்கப்படுகிறது. இவர்களின் திருமணநிச்சயார்த்தம் செசிலியினதும், இவள்சகோதரிகளினதும் 23-வது பிறந்தபெருநாளாகிய சென்றவைகாசிமாதம் 28-ந்திகதி நடைபெறலாயிற்று. இதற்குச் சில தினங்களின்முன்னரே செசிலி ஓர்தாதிமாணவியாகத் தனது கடைசிப்பரீட்சையை முடித்தாள். இவளின்சகோதரிகளில் அனெற்றி டையோன்னே குவெபெக்நகரைச்சேர்ந்த நிகோலெற் எனுமிடத்தில் ஓர் சங்கீதஆசிரியையாகப் பயிற்சிபெற்று வருகின்றாள். இவளும் மொண்றியல் சர்வகலாசாலை மாணவர் ஒருவரை விவாகஞ்செய்யவிருக்கின்றாள். ஐந்துபெண்மணிகளிலும் சீவந்தராயிருக்கும் செசிலி, யொவான்னே, அனெற்றி, மரியேஎனும் நால்வரும் தங்களுக்கெனச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் 10 லட்சம்டலரையும் காலம்வரும்போது பங்குபாகமாகப் பிரித்துக்கொள்வார்கள். எமிலி 1954-ம்ஆண்டு இறந்துபோயினள்.

* * *

● பாப்பரசரது சகோதரரின் புதல்வரான கார்லோ பச்செல்லி இளவரசர் சமீபத்திலே 9-ம்பத்திநாதரின் மகிமை வரிசைக்குரிய சிலுவைவிருது சன்மானிக்கப் பெற்றிருக்கின்றார். இவர்வத்திக்கான் இராச்சிய அரசாங்கத்தின் பிரதமஆலோசகராய் இருந்துவருகிறார்.

● அடுத்துநிகழும் 1958-ம்ஆண்டு பெல்ஜியத்திலே பிறசெல்ஸ்நகரில் நிகழவிருக்கும் சர்வதேசபொருட்காட்சியிலே "தேவனின் நகரம்" என்ற பரிசுத்தஸ்தானத்தின் காட்சிமண்டபத்திலே தரிசகர்களை வரவேற்கும் குழுவிலே பிறபாஷைகளை அறிந்த 2,500 பெல்ஜிய கத்தோலிக்க இளைஞர்கள் தொண்டர்களாகச்சேர்ந்து பணியாற்ற முன்வந்திருக்கிறார்கள்.

● புடாபெஸ்ற்நகரிலே அமெரிக்க தூதுவாலயத்தில் அடைக்கலம்புகுந்து சென்றகார்த்திகைமுதல் அங்கு தானே இருந்துவருகின்ற கருதினால் மின்ட்சென்ரிஆண்டவர் அதனைவிட்டு வெளிகொள்ளுமிடத்துத் திரும்பவும் அவரைச் சிறையில்அடைத்துவிடுவதாகக் ஹங்கேரிய கம்யூனிஸ்த அதிகாரிகள் அறிவித்திருக்கின்றார்கள்.

● கருதினால்யோசெவ்மின்ட்சென்ரி ஆண்டவருக்கு விதிக்கப்பட்ட சீவபரியந்த சிறைத்தண்டனை சட்டமூலம் இன்னுமே செல்லுபடியானதென்று ஹங்கேரிய கல்விமந்திரிகாரியாலயத்திலுள்ள திருச்சபைப்பகுதியின் தலைவர் அன்றுசனிக்கிழமை புடாபெஸ்ற் வானொலிமூலம் தெரிவித்திருக்கின்றார்.

● அவுஸ்திரேலியாவிலே மெல்போண் நகர் அதிமேற்றிராணியாரான பிரசித்திபெற்ற மனிக்ஸ்ஆண்டவர் சமீபத்திலே தமது 93-வது பிறந்த பெருநாளைக் கொண்டாடினார். தற்போது திருச்சபையிலுள்ள அதிவிருத்தப்பிய அதிமேற்றிராணிமாருள் இவரும்ஒருவராவர். இவர் 1912-ம் ஆண்டு அந்நகர் உதவி அதிமேற்றிராணியாராகிப் பின்னர் 1917-ம் ஆண்டு அதிமேற்றிராணியாராயினர்.

● சமயசம்பந்தமா[illegible] சுற்றுப்பிரகாரங்களிலே கம்யூனிஸ்த மேயர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படாதென்று பரிசுத்தகந்தோரின் திருச்சங்கம் பிரமாணம் விதித்திருக்கின்றது. சிசிலிதீவின் அகிறிஜென்ரோ நகரின் பெருசோமேற்றிராணியார் செய்துகொண்ட ஓர்மனுவின்பேரிலேயே இவ்விதம் தீர்மானிக்கப்படலாயிற்று.

● கனடாதேசத்திலே குவெபெக் நகருக்குச்சமீபமான பெயோபிறே பதியிலுள்ள சந்தானுவின் பிரசித்திபெற்ற திருசேத்திரத்தின் மூன்றும் நூற்றாண்டுவிழா வருகிற 1958-ம் ஆண்டு கொண்டாடப்படவிருக்கிறது. இதைமுன்னிட்டு அவ்வருடத்திலே அத்திருசேத்திரத்துக்கு உலகசமாதான திருயாத்திரைஒன்று நடந்தேறவிருக்கிறது.

● கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள யூகோசிலேவியாவிலே ஸ்கோபிள்ஜி நகரிலுள்ள திருஇருதயநாதரின் ஆசனக்கோவிலானது அரசாங்ககட்டடம் ஒன்றை அமைப்பதற்காக அபகரிக்கப்பெற்று இடிக்கப்படவிருக்கிறது. அந்நகரின் செகாடாமேற்றிராணியார் இந்தஆசனக்கோவிலிலே சமீபத்தில் தாம் கடைசியாக நிறைவேற்றிய திவ்வியபூசைமுடிவில் இதுசெய்தியை வெளியிடலாயினர்.

● 1950-ம்ஆண்டுமுதல் செக்கோசிலவக்கியாவின் கம்யூனிஸ்தஅரசாங்கத்தால் சிறைவைக்கப்பட்டுள்ளவரான 68வயதுடைய பிறெசோல்நகரின் கொஜ்டிக்மேற்றிராணியார் நம்திருமீட்பரின் ஐந்துதிருக்காயங்களை அற்புதவிதமாகக் கொண்டிருக்கிறாரெனச் செய்திகிடைத்திருக்கிறது. இந்தக் காயங்களைத் தமதுகண்ணாரக்கண்ட ஒருவரைப் பிற்ஸ்பேர்க்நகரில் பிரசுரமாகும் "பைசாந்தின் கத்தோலிக்க உலகம்" என்றபத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

● பெல்ஜியஅரசாங்கம் வழங்கிவரும் உதவிநன்கொடைப்பணத்தைக் குறைத்துவிடப்போவதாய் அச்சுறுத்தியகாரணமாக அந்நாட்டிலுள்ள கத்தோலிக்க மத்தியகலாசாலைகளைக் கொண்டுநடத்துவதற்கு உதவியாய்ச் சுமார் 1,13,000 தொண்டர்கள்முன்வந்து அந்நாடுமுழுவதிலும் பணஞ்சேகரித்து 17,00,000 பவுண் உதவியிருக்கின்றார்கள்.

● பெல்ஜியத்தின் தலைப்பட்டணமாகிய பிறசெல்ஸ்நகரிலே வருகிற 1958-ம்ஆண்டு நடைபெறவிருக்கின்ற உலகபொருட்காட்சியிலே "தேவனின் நகர்" என்ற வத்திக்கான் பொருட்காட்சிமண்டபத்துக்குக் கத்தோலிக்க தரிசகர்குழுக்களை ஏற்றிச்செல்வதற்கெனப் பரிசுத்தஸ்தானம் 925 பஸ்களை வாடகைக்கு அமர்த்தியிருக்கின்றது. இவற்றிலே சிலபஸ்கள் பிறெசெல்ஸ் நகரறெயில்வேஸ்றேஷனுக்கும், காட்சி நடந்தேறும் தலத்துக்குமிடையே அதிகம்குறைந்தசலாரில் பிரயாண சேவை நடத்திவரும்.

● பம்பாய்நகரின் சுற்றுடலிலே வடலா-சுவேரிஎன்ற றெயில்வே ஸ்றேஷன்களுக்கிடையே சென்ற 2-ந்திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை நடைபெற்ற ஓர்றெயில்வேவிபத்தில் 18பேர்கொல்லப்பட, 53பேருக்குஅதிகமானோர்காயமடைந்தார்கள். பிரயாணிகளின் வண்டிகள்இரண்டு ஒன்றுடனொன்று மோதிக்கொண்டமையே இந்தவிபத்துக்குக் காரணமாகும்.

● ஹங்கேரியிலிருந்து வெளியேறிய கத்தோலிக்க அகதிகளாலே ஸ்கான்டிநேவியநாடுகளின் கத்தோலிக்கசனத்தொகை அதிகரித்திருக்கிறது. 20,000 கத்தோலிக்கரைக் கொண்ட சுவீடன்நாடு சுமார் 4,500 கத்தோலிக்கஅகதிகளை ஏற்றிருக்கின்றது. 5,000 கத்தோலிக்கரைக் கொண்ட நோர்வேநாடு 1,000 அகதிகளைஏற்றுள்ளது.

● இந்தியாவிலிருந்து சென்ற 1956-57-ம் வருடத்திலே சுமார் 72 லட்சம்ரூபா பெறுமதியான 1,56,893 குரங்குகள் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கின்றன. முந்திய நிதிவருடத்தில் ஏற்றுமதியானகுரங்குகள் 1,16,296. இந்தக்குரங்குஏற்றுமதியைத் தடைசெய்ய இந்திய அரசாங்கத்துக்குத் தற்போது யோசனை எதுவும்இல்லை.

● "சீனக்கம்யூனிஸ்த அரசாங்கத்தைவிடத் திறமைவாய்ந்த ஒருஅரசாங்கத்தை இந்தியபிரதமர் பண்டிதநேரு இந்தியாவில் அமைத்திருக்கின்றார். இவரதுஅரசாங்கம் திறமைவாய்ந்ததாக இருக்கும் அதேவேளையில் மக்களின்சுதந்திரத்தையும் அதுபாதுகாக்கின்றது. ஆசியாவுக்குக் கம்யூனிஸ்த ஆட்சி அவசியமில்லைஎன்பதற்கு அவருடையஅரசாங்கமே ஒருஉதாரணம். ஆகவே, தெற்குஆசியநாடுகள் அவரைப்பின்பற்றலாம்" என்று "மான்செஸ்றர் காடியன்" என்ற பிரபலபத்திரிகை எழுதியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



## அண்ணு சொல்லுவது :

**அருமைச்சகோதரங்களே !**

அடுத்த ஞாயிற்றுக்கிழமை தூயஆவியானவரின் ஆகமனத் தினம். அது உத்தானத்தின்பின் ஐம்பதாம்நாள் அனுசரிக்கப்பெறும். எமக்கு மிகமகிழ்ச்சிக்குரிய தினமாய் இருக்கவேண்டியது.
இத்தினத்தில் தூயஆவியானவரைச் சங்கிக்கிறேம். அர்ச்சிக்கும் தேவவரம் உள்ள ஒவ்வொருவரும் தூயஆவியானவரின் இருப்பிடம். ஆகையால், பெந்தெக்கோஸ்துத் திருநாள் எங்கள் ஒவ்வொருவருக்கும் உற்சவதினம்.

தூயஆவியானவரை இன்றுமாத்திரம் நாம் நினைவுகூருகிறது போதாது. அவர் எம்மில் குடிஇருக்கிறதைப்பெரிதாக மதித்துத் தேவவரப்பிரசாதநிலையில் நாம் (ஆத்துமம்) சீவிக்கத் தெண்டிக்க வேண்டும். அவரை நாம் உறுதிப்பூசுதலில் பெற்றுக்கொண்டதை நினைவுகூரவேண்டும். எமது முயற்சிகளைத் தொடங்குமுன் அவருடையஉதவியை வேண்டுவதும் நீங்கள்அறிந்ததே.

மனிதஉருவம் எடுத்தசுதனுகிய கடவுளை நாம் ஞாபகப்படுத்திக் கொள்வது இலகுவாகிறது. சித்துப்பொருளான தூயஆவியை ஞாபகத்தில் வருவிக்கிறது சுலபம்அல்ல. திருஇருதயநாதராகிய யேசுவைநினைப்பதுபோல, தூயஆவியானவரை நாம் நினைப்பதில்லை. ஆனுலும் தேவநேசத்தை எம்மனதில் மூண்டெரியச் செய்கிருர் என்பதை நாம் அறிவோம். எமது ஆத்துமத்துக்கு அவர் செய்யும் சேவைகளைத் திருச்சபை எமக்கு நினைவூட்டாமல்இல்லை.

தூயஆவியானவரே, உமதுஅடியார் உள்ளங்களில் எழுந்தருளி உமது தெய்வீகஅன்பை அவர்கள் இருதயங்களில் மூட்டியருளும்!

உங்கள் அன்புள்ள
அண்ணு

**இலக்கியம் 11**

## விளக்கு

விளக்கம் தருவதால் விளக்கம்என்கிறேம். இருளைநீக்கி ஒளியைக் கொடுக்கிறது விளக்கு. இரவைப் பகலாக்கிக் காட்டுகிறது விளக்கு. விளக்கு இல்லாவிடில் நாம்இருளில் மூழ்கிக்கிடப்போம்.

விஞ்ஞானவளர்ச்சியால் திரிவிளக்குகள், ஆவிவிளக்குகள், வாயுவிளக்குகள்எனப் பலவிளக்குகள் பரிணமித்தன. இப்போது மின்விளக்குக் காலத்தில் நாம் வாழ்கிறேம். இவ் விளக்குகளெல்லாம் புறஇருளைமாத்திரம் நீக்கிப் பிரபையை உண்டுபண்ணுகின்றன. ஆனுல், அகவிருளைநீக்கும் விளக்குகளும் பலஉண்டு. அவை மனதிலுள்ள மாயமயக்கிருளை ஒழித்துத் தூயஒளியை நிறைக்கின்றன. அவற்றுள் மிகச்சிறந்த ஒரு விளக்கு இற்றைக்கு ஈராயிரம்ஆண்டுகளுக்கு முன்னமே தமிழனுக்குக் கிடைத்தது. தமிழன் அதைப் பொன்போலக் காத்துவருகின்றுன். இவ்விளக்கு 'அலடின்' என்பவனுடைய அற்புதவிளக்கிலும் அதிசயமானது. அவ் அவ்வதிசய விளக்குத்தான் நம் திருக்குறள்.

அஃது ஒருபோதும் அணையாத அறிவொளிவிளக்கு. அதன் சுடரொளி மக்கள்உள்ளத்தில் விளைந்துகிடக்கும்இருள்மாசை அறுத்தெறிய வல்ல கதிர்வாள். அதன் பிரகாசத்தில் அறிவானது விடுதலையுற்று, தன்ஆற்றல் முழுவதையும் பெற்றுவிடுகின்றது. அறியாமை, அஞ்ஞானம், பேதமை, பேராசைகள் என்பன தகர்த்தெறியப்படுகின்றன, இன்னும் இஃது அறம், பொருள், இன்பத்துக்கு ஒளியூட்டி வீடுபேற்றுக்கு வழிகாட்டுகின்றது. இவ் விளக்கு இன்று தமிழ்நாட்டில் மாத்திரமன்று, வேறுபலநாடுகளிலும் தமிழ்ஒளிகான்று வருகின்றது.

இதன் அழியாச்சிறப்பை நப்பாலத்தனுர்என்னும் சங்கப்புலவர் எத்துணைச் சிறப்பமையப் பாடியுளார் பாருங்கள்.

அறம் தகளி ; ஆன்ற பொருள் திரி ; இன்பு
சிறந்தநெய் ; செஞ்சொல் தீத்தண்டு ;
—குறும்பாவா
வள்ளுவனுர் ஏற்றினுர் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு

## தினந்தோறும்........

— செ. சி. குரூஸ் —

காலையிற் கண்விழித் தெழுந்து — உடனே
கடவுளை நினைந்துன் துதியினைச் செலுத்து
ஞாலத்தி லாயிர நூறு — நிசமே
நரர்மடிந் தொழிகிருர் நாளுந்தப் பாது

●

ஆதலா லிவ்வருந் தினமே — உனக்கு
அளித்தவர்க் கன்புநீ செலுத்துதல் கடனே
பூதல மேலுனைப் பெற்று — நன்கு
பேணிய மாதா பிதாவையும் போற்று

●

செவிகளில் விழமணி யோசை — கோவில்
சென்றுமே காணுவாய் திவ்விய பூசை
புவியினில் மானிடர் புரியும் — பெரிய
புண்ணியம் பூசை கண்டிடுங் கிரியை

●

சற்பிர சாதமு மருந்து — அதுவோர்
சாகா வரந்தருஞ் சஞ்சிவ மருந்து
தற்பர னுன்னகம் வசிக்க — உன்னைத்
தாக்குமெப் பேய்க்கு மேலுமோ ஜெயிக்க?

●

கடமைக ளாற்றிடுங் காலை — உந்தன்
கருத்ததை மோட்ச கதியினி லேவை
திடமுறு மனப்பலங் கொள்ளு — பொல்லாத்
தீயவை, பாவச் சோதனை தள்ளு

●

வேலைகள் யாவையு முடித்து — சென்று
வீட்டிலுள் மற்றவர் தம்மையுஞ் சேர்த்து
மாலையில் மாமரி பாதம் — செப
மாலையு மோதிப் பாடுவாய் கீதம்

●

நித்திரை செய்யுமுன் மறுநாள் விடிய
நீபிழைத் திருப்பது நிசமல்ல அதனுல்
பத்தியா யான்மசோ தனையும் — பண்ணிப்
பாவங்கட் காய்மனஸ் தாபமே படுவாய்

●

'யேசுவே! மரியே! சூசை!' — ஈருய்
இதுவுன் இதழ்களி லிருக்கவை ஆசை
நேசமோ டவர்களின் தூய — அணைப்பில்
நேர்ந்துனை நிம்மதி யாகக்கண் வளர்வாய்

## அணையாத தீபம்

இத்தாலி தேசத்தில் புளோறன்ஸ் நகரம் பிரபல்யமானது. அந்நகர மக்கள் ஒவ்வொருவரும் அதன் கீர்த்தி புகழுக்காகவே உழைத்து வந்தனர். புளோறென்ஸ் நகரவாசி என்று சொல்லிக்கொள்வதில் அவர்களுக்குப் பெருமை. உலகிலேயே உச்சமானநகரமென அதுதிகழவேண்டும் என்பதே அந்நகரவாசிகள் ஒவ்வொருவருடையவும் அவா. அதற்கு வேண்டிய எதையும் செய்யத்தயாராயிருந்தனர். ருனெயிரே ஒரு போர் வீரன். புளோறன்ஸ் நகரத்தின் சிறந்த பிரசையாக வாழ்ந்து வந்தான். தனது தேசத்திற்குப் பெருமை தரக்கூடிய தொன்றையும் தான் செய்யவில்லையே என்றுதான் அவனுக்குக் கவலை.

ஒருநாள் ருனெயிரே சந்தைவழியாக வந்துகொண்டிருந்த பொழுது அவனுக்கு ஒருயோசனைபுலனுகியது. ஜெருசலேம் நகரத்தில் யேசுக்கிறீஸ்துநாதரை அடக்கம் செய்த கல்லறையிருந்த இடத்திலே கட்டியெழுப்பப்பட்டிருக்கும் தேவாலயத்தில் என்றுமே அணையாது எரிந்துகொண்டிருக்கும் மெழுகு திரியைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தான். ருனெயிரே ஜெருசலேமிற்குப் போய் அங்கு அணையாது எரிந்துகொண்டிருக்கும் அற்புத தீபத்தின் சுடரொளியிலேயிருந்து ஒரு மெழுகு திரியை மூட்டித் தனது தாய் நாட்டிலே அந்தச் சுடரொளியை ஏற்றிவைக்கவேண்டும் என்பதே அவன் யோசனை. இந்த அற்புத தீப ஒளி புளோறென்ஸ் நாட்டிற்குப் பெரும் புகழ்தரும் என்பதே இந்த வீரனின் எண்ணம்.

"நான் இதைச் செய்து முடிப்பேன்" என்று ருனெயிரே துணிந்து விட்டான். ஜெருசலேமுக்குச் சென்று அற்புத வொளியைக் கொண்டுவந்து எனதுநகரஆயரிடம் கொடுப்பேன். அவர் அதை நகர பேராலயத்தில் ஏற்றி வைப்பார். அதன் சுடரொளியில் நின்று ஏனைய மெழுகு வர்த்திகளும் ஒளி பெறும். அணையாத அற்புத தீபஒளி என்றும் புளோறன்ஸ் நகரத்தில் ஜொலித்துக்கொண்டிருக்கும். இதன்பயனுக எனது நகரம் எத்துணை பெருமையடையும் என்று பலவாறு சிந்திக்கலானுன்.

பிரயாணத்திற்கான உடைகளை அணிந்துகொண்டு கவசத்தையும் எடுத்துக்கொண்டு தனது குதிரையில் புறப்பட்டான் வீரன். பிரயாணத்தின்போது பல கஷ்ட அனுபவங்கள் ஏற்பட்டனவெனினும், வரும்பொழுதே அதிகமான கஷ்டங்கள் விளைந்தன.

எரிந்துகொண்டிருக்கும் மெழுகு திரியை அணையாது காப்பதெங்ஙனம்? குதிரையில் சவாரி செய்யும் அவனுக்கு அது கஷ்டமாக இருந்தது. புத்தியைப் பிரயோகித்துத் தான் சவாரி செய்துகொண்டிருந்த குதிரையின் பின்புறமாகத் திரும்பியிருந்து கொண்டு காற்று மெழுகு திரியை அணைத்துவிடாதபடி பாது காத்துக்கொண்டு சென்றுன்.

இடைநடுவில் கள்வர் மறித்தனர், "குதிரையைவிட்டுக் கீழே இறங்கு; நீ எங்கள் அடிமை" என்று அதிகாரத்துடன் உத்தரவிட்டனர். "என்னுடைய குதிரையை எடுத்துக்கொள்ளுங்கள்; என்னிடமிருக்கும் பொருள் பண்டங்களையும், எனது பணம் முழுவதையும் எடுத்துக்கொள்ளுங்கள். ஆனுல், எனது இந்த எரிகிற மெழுகுதிரியை மாத்திரம் விட்டுவிடுங்கள்" என்றுன் ருனெயிரே. கள்வர் திருப்தியடைந்து எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு மெழுகு திரியை மாத்திரம் விட்டுச் சென்றுர்கள்.

(வளரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தம தோழன்

உலகில் வாழும் வயோதிபர், வாலிபர், குழந்தை சகலரும் தம்மை அதிகமாய் நேசிப்போரைத் தாமும் நேசிக்கின்றனர். இப்படியே ஒவ்வொருவரையும் நேசிக்கும் இருவரும் ஓரளவிற்கு ஒரே வயதினராயும் ஒரே தகுதியினராயுமிருந்தால் அவர்கள் நண்பர்கள் எனப்படுவர். இந் நண்பர்கள் தம்மால் ஆனபடி பிரயாசையுடன் பல விதத்திலும் தம்மை மகிழ்வித்துக் கொள்கின்றனர். ஆயின், எல்லா நண்பர்களும் நல்ல நண்பர்கள் அல்லர். தன் நண்பனுக்கு ஆபத்து விளைந்தாலும், சாதகம் விளைந்தாலும் தன் நண்பனை நேசித்து அவனை நல்ல வழியிலே கொண்டுசெல்ல முயலுபவனே நல்ல நண்பனும். இப்படியான நண்பர்களை உலகிலே கண்டடைவது மிக மிக அரிது.

எனினும், வெகு பிரயாசையின்றிக் கண்டடையக்கூடிய ஓர் நண்பர் உளார். அவர்தான் நேசச்சுவாலையும், ஒருபோதும் நேசத்தைக் குறைக்காதவருமான "யேசு பெருமான்." இவர் தயாளமும் இரக்கமும் நிறைந்தவர். நாம்யாவரும் இவ் இரட்சகரது நண்பர்களாகலாம். அவரது நண்பர்களாகும்படி எம்மை அவர் கேட்பதால் நாம் எல்லோரும் அவரது நண்பர்களாகக் கடமைப் பட்டிருக்கிறோம். எவ்விதமான பரிசுத்தவாளிகளும் யேசுவின் நண்பர்களாகப் பாத்திரவான்களாகார்கள். ஆயினும், யேசுவின் மட்டற்ற தயையினால் நாம் அவரது நண்பராகலாம். நண்பனொருவன் மற்ற நண்பனை மகிழ்விக்கத் தன்னாலானது செய்வது போல் யேசுவின் நண்பராகிய நாம் அவர் வெறுக்கும் பாவக்கிரிகைகளை வெறுத்துப் புண்ணியக் கிரிகைகளை விருப்புடன் செய்து அவரை மகிழ்விப்போமாக. நாம் எமது நண்பருடன் வாசஞ்செய்ய விரும்புவது போல் நாமும் எமது நேசரான யேசுவை எம் இருதயத்தினுட் கொண்டு அவருடன் வாசஞ்செய்ய வேண்டும். நண்பனொருவன் தன் சுக துக்கங்களை மற்றவருக்குக் கூறுவது போல் நாமும் எம் சிறுகாரியங்களைப் பற்றி யேசுவிடம் சம்பாஷிக்க வேண்டும். விசேஷமாய்ச் சிறு பிள்ளைகளாகிய நாம் விளையாட்டில் அடையும் வெற்றி, தோல்வி, சித்தி, தோல்வி, செல்வம், வறுமை ஆதியனவற்றையும் நாம் எமது உலக நண்பரிடங் கூறுவதுபோல் யேசுஎன்னும் உத்தம நேசரிடமும் கூற வேண்டும். நாம் எம் தோழர் விரும்புவதைச் செய்வதுபோல் யேசுவிரும்பும் மனவல்லயச் செபங்களையும், ஒறுத்தல் முயற்சிகளையும் செய்து பாவிகட்காக ஒப்புக்கொடுத்து அவரை மகிழ்விக்கவேண்டும். நாம் எம் நண்பரைப்போல் சீவிக்கிறபடியால் யேசுவையும் நாம் பின்பற்றி அவர் செய்வதுபோல் நாமும் எம் ஒவ்வொரு கிரிகைகளையும் செய்தல் வேண்டும்.

யேசுநாதர் தமது இராச்சியத்தைப் பூவுலகில் பரப்ப முயலும் எமது நாமத்தைத் தம்இருதயத்திற் பதித்து வைப்பதாகப் பொருந்தியிருக்கிறார். அவர் சிலுவையில் மரிக்கும்போது தம்மை வதைத்த யூதர்களுக்கு முதலாய்த் தம் மனப்பூர்வமான மன்னிப்புக் கொடுத்தார். அப்படியாயின் அவர் தம்மை நேசிப்பவர்களை எப்படி நேசிப்பார்? நாம் யேசுவை நேசித்தால் நாம் விரும்பும் யாவற்றையும் பெறலாம். ஆயின் நாம் அவற்றைப் பெற விசுவாசம் அவசியம். அர்ச். தெரேசம்மாள் கடுங் கோடைகாலத்தில் ஒருநாள் யேசு தன்னை நேசிக்கிறாரா என்று அறிவதற்காக மறுநாட்காலை நிலத்திற் பனிக்கட்டிகளைக் காண விரும்புவதாக உயிருள்ளவிசுவாசத்துடன் யேசுவை வேண்டிநின்றனள். பின் மறுநாட்காலை நிலத்திற்கண்ட பனிக்கட்டிகளைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தாள். இதனால் யேசுநாதர் தம்மை நேசிப்பவர்கள் கேட்கும் யாவற்றையும் அவர்களுக்கு ஈந்தருளுவார் என்பது திண்ணம். எனவே, நாம் யேசுவைத் தகுந்தபடி நேசிக்கும் தேவதாயின் துணையுடன் யேசுவை அதிக மதிகம் நேசிப்போமாக. அவரே எமது ஞானப்பொக்ஷமாக இருப்பாராக. அவரது நாமம் புகழப்படுவதாக!




## JAFFNA MUNICIPAL COUNCIL

### Supplementary Budget No. 1 of 1957

NOTICE is hereby given in terms of section 214 (2) (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that the Supplementary Budget No. 1 of the Jaffna Municipal Council for the year 1957 will be open to public inspection at the Municipal Office for seven days from 8th June, 1957.

S. S. Navaratnam,
Mayor,
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffna, 3rd June, 1957.

திரு. ஐ. வரப்பிரகாசம் (ஆசிரியர்)
(நாக்கியம்புலம், ஏழாலை.)
அவர்களின்

## அமரதின நினைவு

முதல் ஆண்டு

தோற்றம் : 8-4-1884
மறைவு : 6-6-1956

**"நித்திய இளைப்பாற்றியை இவருக்குத் தந்தருளும்; முடிவில்லாத பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக்கடவது."**

எனதுபத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமான திரு. ஐ. வரப்பிரகாசம் அவர்கள் மரணத்திரையில் மறைந்த முதல்ஆண்டு 6-6-56-இல் பூர்த்தியாகிறது. இதனைக்கண்ணுறும் அவருடன் கல்விகற்பித்த ஆசிரியர்களையும், அவரிடம் கல்விபயின்ற மாணவர்களையும், இனசனர், மற்றுஞ்சகல கிறீஸ்துவர்களையும் அவரின் ஆத்துமத்தைக் கர்த்தரின் வீட்டுக்குள் இட்டுச்செல்ல வேண்டிக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அவரைப்பிரிந்து தவிக்கும்
மனைவி—மக்கள்—மருமக்கள்

## Supplement to the College Prospectus 1957.

## ST. PHILOMENA'S COLLEGE, MYSORE.

### Notification

The College re-opens on the 25th June, 1957.

(1) **Courses provided :** 1st year—Pre-University course.
2nd year—Intermediate.
3rd and 4th year—B.A., & B.Sc. Courses.

(2) **Second language:** Kannada, Hindi, Tamil. Urdu, French, Malayalam, Sanscrit.

(3) **Diploma course in French:** Affiliated to the Mysore University (2 years).

(4) **Diploma course in Social Service :** Conducted under the direction of the Indian Institute of Social Order, Poona, recognised by the Central Government (2 years).

(5) **College Hostel:** Application for admission should be made to the Warden separately.

Applications in the prescribed form should be submitted on or before 20th June 1957 for Pre-University Course and 25th June 1957 for Junior B.A. and B.Sc. and should be sent to the Principal, St. Philomena's College, Mysore, along with the College registration fee.

**Principal.**

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1314

**யாழ்ப்பாணம்**
**வண்ணார்பண்ணை கிழக்கு**

(1) அருணாசலம் விசுவநாதனும்,
(2) பெண் வேதநாயகியும்

— வழக்காளிகள்.

எதிராக

**யாழ்ப்பாணம்**
**வண்ணார்பண்ணை மேற்கு**
தற்போது கொக்குவில்

(1) நாகலிங்கம் அமிர்தலிங்கமும்,
(2) பெண்யோகவதியும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1314-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1957-ம் ஆண்டு ஆடிமாதம் 17-ந்திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,321/10-உம், இன்னும் ரூபா 1,000/த்திற்கு 6-11-56 தொடக்கம், 28-1-57 வரையும் 10 வீதவட்டியும், அதற்குப்பின்னல் கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 5வீதவட்டியும், கோட்டுச் செலவு 201 ரூபா 65சதமும்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி, நாவற்குளி கோவிற்பற்று கைதடி-நாவற்குளிஇறை. 'கள்ளித்திடல் வயல்' பர. செ. இல. 20-உம்டி அதேபேர்உள்ள எல்லைக்காணி பர. செ. இலா. 10. இவ்விரண்டும் ஒருங்கே சேர்ந்த பர. செ. இலா. 30கொண்ட ஒரு துண்டுக்காணி. இதற்கு எல்லை: கிழக்கு—ஒழுங்கையும், முத்துக்குமாரு செல்லப்பாவின் ஆதனம். வடக்கு— முத்துக்குமாரு செல்லப்பாவின் ஆதனமும், அம்பலவாணசுவாமிகோவில் ஆதனமும். மேற்கு — முத்துக்குமாரு செல்லப்பாவின் ஆதனம். தெற்கு — தனங்கிளப்பு றோட்டு.

24 சப்பெல்வீதி, யாழ்ப்பாணம்.
30-5-57

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

### அரிசிப் பங்கீட்டுமுறை

தற்போது நடைமுறையில் இருந்து வருகின்ற அரிசிப்பங்கீட்டுமுறையை —அதாவது கூப்பன்முறையை இன்னும் சிலவருடங்களுக்கு நிறுத்தமுடியாதென உணவு-கமத்தொழில்பகுதி தீர்மானித்திருக்கிறது. தற்சமையம் அரிசியின்விலை உலகசந்தையில் உயர்ந்திருப்பதும், இலங்கையின் மொத்தமான அரிசித்தேவையில் 75விகிதந் தானும் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படாதிருப்பதுமே அதற்குரிய காரணங்களாகும்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

எனக்கு எலிகடித்து இரண்டுகையிலும் வந்த கரப்பன்வியாதி சுகமடைய, பரிசுத்த சதாசகாயஇராக்கினியிடம் இரந்து கேட்டதும் நான் சுகம்அடைந்தேன். புதுமைசெய்த பரிசுத்த இராக்கினிக்கு ஸ்தோத்திரம்.

நாரந்தனை, சவீனம்

* * *

ஓ! பிரதாபம்நிறைந்த மோட்சஇராக்கினியே! சம்மனசுகளின் [illegible] உன்னத ஆண்டவளே! நம்பி[illegible]ரக்கைவிடாத பேருபகாரியாகிய [illegible]. அந்தோனியாரே! உங்கள் அடியார்களில் ஒருத்தியாகிய என்னை இந்தப்பெருங் கவலையில் நின்று கைதூக்கிக் காத்தருளினீர்கள்.

இரக்கம்நிறைந்த அன்னையே! எனது பேரப்பிள்ளை பிறக்கும்போதே சொண்டில் ஓர்பிளவுடன்பிறந்து தனது உணவாகிய பாலைத்தானும் குடிக்கமுடியாமல் "ரியூப்"மூலம் சிறுசிறுதுளியாகவாயில் விட்டு அதன் பசியைத்தீர்க்கவேண்டி நேரிட்டது. அதன்பரிதாபத்தைத் தாங்கமாட்டாது, சதாசகாயமாதாவிடமும், அர்ச். அந்தோனியாரிடமும் தஞ்சமென்றடைந்தேன். நவநாள்தொடங்கி மூன்று கிழமையுள் தாயின்புதுமையை என்னென்றுஎன்நாவால்உரைப்பேன். சொண்டைச் சரிப்படுத்தக் கொழும்புக்குக்கொண்டு போகும்படி டக்டர்மார் புத்திகூறினர். ஆனல், இப்பொழுது யாழ்ப்பாணவைத்தியசாலையிலேயே சத்திரசிகிச்சைசெய்து குழந்தை நல்லசுகத்துடன் பால்குடிக்கின்றது. இப்பெரும்புதுமையை அற்பனுகியஎன்னல் எடுத்துக்கூற முடியாது. எம்நேசத்தாயின்நாமமும், அர்ச். அந்தோனியாரின்நாமமும் சதாகாலமும் புகழப்படுவதாக.

ஏழாலை Mrs. V. P.

**மகிழ்ச்சி பொங்கும் சிரிப்புக்கு ஊற்று மகிழ்ச்சிநிறைந்த இருதயந் தான். கருணையில்லா விட்டால் உண்மையான மகிழ்ச்சி இருக்காது.**

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 6-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org